# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 7 அக்டோபர் - டிசம்பர் 2001 இதழ் 4



அழிவுக்கு முன் அழகிய நியூயோர்க்

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்!"

# திருமறைத்தீபம்

Issue No. 4 of 2001

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப் படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ் விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*1834-1892*



*தொடர்ந்து பத்திரிகை எங்களுக்கு ஆத்ம விருந்தளித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைத் தந்து வருகின்றது என்று வரும் கடிதங்களும், இன்றைய காலகட்டத்திற்கு பொருந்திவரும் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது என்று வரும் கடிதங்களும் எங்கள் பணியைப் பெரிதும் சுலபமாக்குகின்றன. கிறிஸ்தவ பத்திரிகை என்ற பெயரில் வெளிவந்து கிறிஸ்தவத்திற்கு எந்த மகிமையையும் அளிக்க மறுக்கும் நூற்றுக்கணக்கான வார இதழ்களும், மாத இதழ்களும் மலிந்து கிடக்கும் இந்நாட்களில் வித்தியாசமான இதழாக வேதஅடிப்படையில், வேதபோதனைகளை மட்டும் அளித்துவருவதை நோக்கமாகக்கொண்டு ஏழ வருடங்களைத் தாண்டி வந்துவிட்டோம். இந்நாள்வரைக்கும் எம்மோடிருந்து எமக்குத் துணைபுரிந்து வரும் தேவன் இப்பணியில் இனியும் துணை செய்வார் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.*

*ஏழு வருடங்களில் எதைச்சாதித்திருக்கிறோம்? எமது நோக்கங்களில் ஏதாவது நிறைவேறியிருக்கின்றதா? என்ற கேள்விகள் உள்ளத்தில் எழாமலில்லை. நினைத்ததற்கும் மேலாக, நினைத்தே பாத்திராதவகையில் நம்தேவன் திருமறைத்தீபத்தை அநேக ஆத்துமாக்களின் உற்ற நண்பனாக அறிமுகப்படுத்தி வைத்துள்ளார். ஓரிதழ் வரத்தவறிவிட்டாலும், ஏன் அனுப்பவில்லை? எங்கள் முகவரியை நீக்கிவிட்டீர்களோ? என்று பதற்றத்தோடு கேட்டு வரும் கடிதங்கள் விழியோரங்களைப் பல தடவைகள் ஈரப்படுத்தியுள்ளன. (<u>சிலவேளைகளில் வெளியூர் போஸ்ட் ஆபிசுகளின் தவறாலும், இடம் மாறுகிறவர்கள் நேரத்தோடு புதிய முகவரியை அனுப்பத்தவறுவதாலும் பத்திரிகையை வாசகர்களுக்கு நாம் அனுப்பியும் கிடைக்காமல் போய்விடுகின்றது. பத்திரிகை திரும்பி வந்தால் மட்டுமே முகவரியை நாம் நீக்கிவிடுகிறோம். வரவில்லை என்று எழுதிக் கேட்பவர்களுக்கு மறுபடியும் இதழை அனுப்பி வைக்கிறோம்</u>.)*

*கெரிஸ்மெட்டிக், பெந்தகொஸ்தே மாயைகளின் வசப்பட்டும், சமய சமரசக்குழப்பத்திற்குள்ளாகியும் தனது தனித்தன்மையை இழந்து துவண்டு நிற்கும் தமிழ்க்கிறிஸ்தவ உலகிற்கு சீர்திருத்த விசுவாசத்தை அறிமுகப்படுத்தி, சீர்திருத்த சபைகள் உருவாகவும், வளரவும் பாடுபடும் நோக்கத்துடன்தான் இப்பத்திரிகை ஆரம்பத்தில் தலைதூக்கியது. அந்நோக்கம் இந்த ஏழு ஆண்டுகளில் தவழும் குழந்தையாகவாவது மாறியிருப்பதில் எமக்கு மகிழ்ச்சியே. கர்த்தரின் துணையோடு வரப்போகும் வருடத்திலும் அந்நோக்கத்திற்காக இவ்விதழ் பாடுபட, இதை எழுதுபவர்களும், வெளியிடுபவர்களும் தளராது பணிசெய்ய உங்கள் ஜெபத்தை நாடி நிற்கிறோம். தமிழகம், ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பல்வேறு மேலைநாடுகளிலும் வாழும் அன்பர்களின் இதயபூர்வமான ஜெபங்களின் தயவாலேயே நாம் எமது பணியைத் தொடர முடிந்திருக்கின்றது. இவ்வேழாவது வருடம் அதை எமக்குப் பெரிதும் காட்டியுள்ளது. <u>2002 இல் பத்திரிகை புதிய தோற்றத்தோடு மலரவிருக்கிறது. பலரது வசதி கருதி அதைச் செய்துள்ளோம்.</u> தோற்றத்தில் மாற்றமிருந்தாலும் பக்கங்கள் குறையாது. சத்தியமும் மாறாது. இவ்விதழ் உங்களுடைய ஆத்ம விருத்திக்குப் பயனுள்ளதாக இருக்க கர்த்தர் ஆசீர்வதிக்கட்டும். புதிய ஆண்டில் தனது பெரும் கிருபையால் சமாதானத்தைக் கர்த்தர் உங்களுக்கு அருளட்டும். - ஆசிரியர்*



# கல்வினிச ஐங்கோட்பாடுகள் இன்று அவசியமா?

இதற்கு முன்வந்த இதழில் கல்வினிச ஐங்கோட்பாடுகள் மட்டுமே சீர்திருத்த விசுவாசமாகி விடாது என்று எழுதியிருந்தோம். சீர்திருத்த விசுவாசத்தை அறிந்து கொள்ள முயலுகிறவர்கள் அதை முழுமையாகப் புரிந்து கொள்ளுவது மிக அவசியம். இப்படி நாம் எழுதியிருப்பதால் கல்வினிச ஐங்கோட்பாடுகளை நாம் எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிட்டுவிடவில்லை. அதன் அவசியத்தையும் எந்தவிதத்திலும் தாழ்த்திப் பேசிவிடவில்லை. கல்வினிச ஐங்கோட்பாடு வேதம் போதிக்கும் சுவிசேஷத்தையும், கிறிஸ்து இலவசமாக அளிக்கும் இரட்சிப்பையும் பற்றியது. அது சீர்திருத்த விசுவாசத்தின் முக்கிய போதனைகளில் ஒன்று. கல்வினிச ஐங்கோட்பாடுகளை விசுவாசிக்காமல் ஒருவர் மெய்ச்சுவிசேஷத்தையோ அல்லது சீர்திருத்த விசுவாசத்தையோ அறிந்து கொள்ள முடியாது. கல்வினிச ஐங்கோட்பாடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கிலாந்தில் போதகராக இருந்த, பிரசங்கிகளின் இளவரசன் என்று வர்ணிக்கப்படும் கல்வினிச சீர்திருத்த பாப்திஸ்து போதகராக இருந்த ஸ்பர்ஜன் சொல்கிறார்,

> "கல்வினும், அகஸ்தீனும், பவுலும் போதித்த அந்தப் பழமையான சத்தியங்களையே நானும் போதிக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய மனச்சாட்சிக்கும், கர்த்தருக்கும் விரோதமாக நான் நடந்தது போலாகிவிடும். என்னால் சத்தியத்திற்கு உருவங் கொடுக்க முடியாது; சத்தியத்தின் கரடுமுரடான விளிம்புகளை சரிப்படுத்தும் வேலையெல்லாம் எனக்குத் தெரியாது. ஜோன் நொக்ஸினுடைய சுவிஷேசமே என்னுடைய சுவிசேஷம். ஸ்கொட்லாந்து நாடு முழுவதும் இடிபோல அதிர்ந்த அச்சத்தியம் இங்கிலாந்திலும் அதிரும்படி பிரசங்கிக்கப்பட வேண்டும்."

இது ஸ்பர்ஜன் கல்வினிசத்தைப்பற்றிச் சொன்ன வார்த்தைகளாகும்.

கல்வினிச ஐங்கோட்பாடுகளுக்கு "கிருபையின் போதனைகள்" என்ற பெயரும் உண்டு. தேவ கிருபையின் மூலமாகவே ஆத்துமாக்கள் இரட்சிப்பை அடைகிறார்கள் என்று இது போதிப்பதால் இப்பெயரைப் பெற்றது. இதைக் "கல்வினிசப் போதனைகள்" என்றும் அழைப்பார்கள். கல்வின் தன் வாழ்நாள் முழுவதும் இதைப்போதித்து விளக்கியதால் இதற்கு "கல்வினிசம்" என்ற பெயர் ஏற்பட்டது. இவையெல்லாம் இவ்வைங் கோட்பாட்டை விளக்கும் வேறு பெயர்கள். வசதி காரணமாக இவ்வாக்கம் முழுவதும் நான் "கல்வினிசம்" என்றே இப்போதனையை வர்ணிக்கப் போகிறேன். ஸ்பர்ஜன் சொல்கிறார், "இப்போதனையைக் கல்வின் உருவாக்கவில்லை. வேதத்தில் ஏற்கனவே காணப்பட்ட இந்த சத்தியத்தை கல்வின் அறிந்து போதித்தார்" என்று. கல்வினுக்கு முன்பாக இப்போதனை ஐந்தாம் நூற்றாண்டில் அகஸ்தீனால் போதிக்கப்பட்டது.

## கல்வினிச ஐங்கோட்பாடுகள் தொகுக்கப்பட்ட வரலாறு

கல்வினிசப்போதனைகள் ஐங்கோட்பாடுகளாக, கிருபையின் போதனைகள் என்ற வடிவில் தொகுக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். இதற்கு திருச்சபை வரலாற்று அறிவு மிகவும் அவசியம். கல்வினின் மறைவுக்குப்பின் அவரது சீர்திருத்தப் போதனைகளை எதிர்த்து அவற்றிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டான் ஜேம்ஸ் ஆர்மீனியஸ் (James Arminius) என்ற மனிதன். **1610** இல் அவனது மறைவிற்குப்பின் அவனுடைய சீடர்கள் ஐந்து கோட்பாடுகளை வெளியிட்டு, திருச்சபைகளை வேத அடிப்படையிலான சீர்திருத்தப் போதனைகளுக்கு எதிராகத் திருப்ப எத்தனித்தனர். இவர்களது போதனைகள் ஆர்மீனியனிசம் (Arminianism) என்று இன்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது.

இவ்வார்மீனியனிச ஐங்கோட்பாடு அதற்கு முன்பே தோன்றியிருந்த பெலேஜியனிசம் (Pelagianism) என்ற போலிக்கோட்பாட்டைத் தழுவி எழுந்ததாகும். பெலேஜியனிசம், பெலேஜியஸ் (Pelagius) என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு துறவியால் போதிக்கப்பட்டது. இப்போதனை மனிதன் இயற்கையிலேயே பாவியல்ல என்ற சத்தியத்திற்கு முரணாக போதனையைக் கொண்டிருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் அகஸ்தீன் (Augustine) பெலேஜியனிசக் கோட்பாட்டிற்கு எதிராகப் போராடினார். அகஸ்தீன், பிறப்பிலேயே பாவியாக உருவான மனிதன் தன் சுயவல்லமையால் தேவநீதிக்கும் சுவிசேஷத்திற்கும் கட்டுப்பட முடியாத நிலையில் இருக்கிறான் என்று போதித்தார். ஆகஸ்தீனின் போதனைக்கெதிரான பெலேஜியனிசக் கோட்பாடு பின்பு புதுப்பிக்கப்பட்டு செமி-பெலேஜியனிசம் (Semi-Pelaginanism) என்ற உருவத்தை அடைந்தது. இப்போதனையைத் தொற்றுவித்தவன் கேசியன் (Cassian) என்பவனாகும். இப்போதனை, மனிதன் பாவிதான் என்பதை ஒப்புக்கொண்டாலும் அவன் தான் இயற்கையாகக்

**விசுவாசிப்பது மனிதனுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அதற்குத் துணை செய்வதே கடவுளுடைய வேலை, என்பதே செமி-பெலேஜியனிசத்தின் போதனை.**

கொண்டிருக்கும் வல்லமையயின் மூலம் மனந்திரும்புதலுக்கான முதலாவது படியில் தானே சுயமாகக் காலடி எடுத்து வைக்கக்கூடியவனாக இருக்கிறான் என்று போதித்தது. ஆகஸ்தீனின் போதனைக்கும், பெலேஜியனிசப் போதனைக்கும் மத்தியில் அமையும்படி இப்போதனை உருவானது. கேசியன், மனிதன் பாவி என்பதையும், பாவம் அவனுடைய எல்லா அங்கங்களையும் பாதித்துள்ளது என்பதையும் ஏற்றுக்கொண்டான். ஆனால், தேவ கிருபை எல்லா மனிதர்களுக்கும் பொதுவாகக் கொடுக்கப்படுகின்றதென்றும், அதனால் மனந்திரும்புதலுக்கான தீர்மானத்தை எடுக்கக்கூடிய வல்லமையை தனது சுயாதீன சித்தத்தின் (Free-Will) மூலம் மனிதன் கொண்டிருக்கிறான் என்றும் போதித்தான். ஜோர்ஜ் ஸ்மீட்டன்[1] என்ற இறையியல் வல்லுனர் இப்போதனைபற்றி எழுதும்போது, "விசுவாசிப்பது மனிதனுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அதற்குத் துணை செய்வதே கடவுளுடைய வேலை, என்பதே செமி-பெலேஜியனிசத்தின் போதனை" என்கிறார். செமி-பெலேஜியனிசம், மனந்திரும்புவதற்கான ஆரம்ப நடவடிக்கையை மனிதனே சுயமாக செய்யக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்ற பெருந்தவறான முடிவைக் கொண்டிருந்தது. ஆர்மீனியனிசம் செமி-பெலேஜியனிசத்தைத் தழுவி ஏற்பட்ட போதனையாகும். இவை இரண்டுக்கும் இடையில் அதிக வேறுபாடுகள் காணப்படவில்லை. பாதி சத்தியத்தையும், பாதிப் பொய்யையும் கொண்டு இவ்விருபோலிப்போதனைகளும் அமைந்துள்ளன.

இப்படிப்பட்ட வேதத்திற்கு முரணான போலிப்போதனையை ஐந்து கோட்பாடுகளாக வெளியிட்டுப்போதித்த ஆர்மினியனின் சீடர்களுக்கு என்ன நடந்தது என்று பார்ப்போம். முதலில் இவர்களுடைய ஐந்து கோட்பாடுகள் என்ன என்று பார்ப்பது அவசியம். 1) மனிதனுக்கு சுயாதீன சித்தம் உண்டு. 2) நிபந்தனையுள்ள தெரிந்து கொள்ளல். 3) உலகளாவிய மீட்பு. 4) பரிசுத்த ஆவியின் செயலை மனிதனால் தவிர்க்க முடியும். 5) கிருபையின் ஸ்தானத்தில் இருந்து மனிதனால் விழுந்து போக முடியும். இவையே ஆர்மீனியனுடைய சீடர்கள் போதித்த போதனைகளின் தொகுப்பு. இப்போதனைகளைத் திருச்சபைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஏற்கனவே இருந்த சீர்திருத்த விசுவாச அறிக்கைகளும் வினாவிடைப் போதனைகளும் மாற்றப்பட வேண்டும் என்றும் ஆர்மீனியனுடைய சீடர்கள் ஒல்லாந்து சீர்திருத்த சபையைக் கேட்டுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் திருச்சபைகள் சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றி விசுவாச அறிக்கைகளையும் கொண்டு நல்லபடியாக இயங்கி வந்து கொண்டிருந்தன. இதற்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் ஒல்லாந்து நாட்டில் திருச்சபைத் தலைவர்கள் இப்போதனைகளை ஆராய 1618 இல் டோர்ட் (Dort) என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள். ஏழு மாதங்களில் **154** தடவைகள் அவர்கள் கூடி ஆர்மீனியனிசப் போதனைகளை ஆழமாக ஆராய்ந்தனர். அப்போதனைகள் வேதத்திற்கும், சீர்திருத்தப் போதனைகளுக்கும் முரணாக இருப்பதை உணர்ந்த அவர்கள் அவற்றிற்கெதிரான ஐந்து கோட்பாடுகளை வெளியிட்டனர். தவறான போதனைகளை அளித்த ஆர்மீனியனின் சீடர்களும் நாடு கடத்தப்பட்டனர். திருச்சபைகள் ஆர்மீனியனிசப் போதனைகளின் ஆபத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவே டோர்ட் கவுன்சில் (Counsil of Dort) இதைச் செய்தது. டோர்ட் கவுன்சில் வெளியிட்ட ஐங்கோட்பாடுகள் பின்பு கல்வினிச ஐங்கோட்பாடுகள் என்ற பெயரைப் பெற்றன. இவற்றை "கிருபையின் போதனைகள்" என்றும் அழைப்பார்கள். இதற்குக் கல்வினின் பெயர் கொடுக்கப்பட்டதற்கு, சீர்திருத்தவாதப் போதனைகள் தோன்றுவதற்கு கல்வின் அளித்த சிறப்பான பங்கே காரணம். இன்று இவ்வைங்கோட்பாடுகளைக் கல்வினிசப் போதனைகள் என்றும், இவற்றை விசுவாசித்துப் பின்பற்றுபவர்களை கல்வினிஸ்டுகள் என்றும் அழைப்பார்கள்.

## ஐங்கோட்பாடுகளும், ஆர்மீனியனிசமும்

கல்வினிச ஐங்கோட்பாடுகளாவன: 1) மனிதனின் முழுமையான சீரழிவு. 2) நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளல். 3) குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு அல்லது வரையறுக்கப்பட்ட மீட்பு. 4) தவிர்க்க முடியாத அழைப்பு. 5) பரிசுத்தவான்களின் விடாமுயற்சி என்பனவாகும். இவற்றை அவற்றின் முதல் எழுத்துக்களைப்பயன்படுத்தி ஆங்கிலத்தில் "டுளிப்" (Tulip) என்றும் அழைப்பர்.

வரலாற்றில் தோன்றிய இரட்சிப்பைக்குறித்த இந்த இறையியல் சம்பந்தமான போராட்டம் மிகவும் பாரதூரமானது. கர்த்தரைப்பற்றியும், பாவத்தைப்பற்றியும், இரட்சிப்பைப்பற்றியும் வேதம் போதிக்கும் போதனைகளை இப்போராட்டம் பாதித்தது. இவ்விரண்டு கோட்பாடுகளில் ஒன்றே வேதபூர்வமானது. மற்றது போலிப்போதனையாகும். இதை இன்று அநேகர் புரிந்து கொள்ளதில்லை. ஆர்மீனியனிசமும் வேதத்தில் காணப்படுகின்றது என்று சிலர் புரியாமல் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் வேதம் போதிக்கும் கல்வினிசப் போதனைகளையும், வேதத்திற்கு முரணான ஆர்மீனியப் போதனைகளையும் சரிவரப்புரிந்து கொள்ளவில்லை. அதுமட்டுமல்லாமல் கல்வினிசத்தைப் பற்றி பல கட்டுக்கதைகளையும் சிலர் அவிழ்த்துவிட்டிருக்கின்றனர். கல்வினிசத்தை விசுவாசிப்பவர்கள் - மனிதன் ஒன்றுமே செய்ய லாயக்கில்லாதவன் - என்று நம்புபவர்கள் என்பது பலரது தவறான எண்ணம். இது கல்வினிசம் என்றால் என்னவென்று தெரியாத பத்தாம் பசலிகள் அவிழ்த்துவிட்ட வதந்தி.

கல்வினிசத்திற்கும் ஆர்மீனியனிசத்திற்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்வது அவசியம். ஜே. ஐ. பெக்கர் (J. I. Packer)

இதுபற்றிப்பின்வருமாறு எழுதுகிறார்,

> "கல்வினிசம் நம்மை இரட்சிக்கும் கடவுளைப் பற்றி விளக்குகிறது, ஆனால் ஆர்மீனியனிசமோ நாமே நம்மை இரட்சித்துக்கொள்ளத் துணை செய்யும் கடவுளைப்பற்றிப் போதிக்கின்றது. கல்வினிசம், வீழ்ந்து போனவர்களுக்கு நிச்சயமான இரட்சிப்பை அளிக்கக்கூடிய திரித்துவக் கடவுளின் மூன்று பெரும் அருஞ் செயல்களான பிதாவின் தெரிந்து கொள்ளுதல், குமாரனின் மீட்பு, பரிசுத்த ஆவியின் அழைப்பு ஆகியற்றை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக விளக்குகிறது. ஆனால், ஆர்மீனியனிசமோ, இம்மூன்றையும் வெவ்வேறாகப் பிரித்து விளக்கி இவற்றில் எவற்றாலுமே எவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று போதிக்கின்றது. ஆர்மீனியனிசம், கிறிஸ்துவின் மீட்பின் பலன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சொந்தமானது என்கிறது. அத்தோடு, பரிசுத்த ஆவியின் அழைப்பு சுவிஷேசத்தைக் கேட்கும் அனைவருக்கும் கிடைப்பதாகவும் ஆனால், சுவிஷேசத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ கூடிய வல்லமை மனிதனுக்கு உண்டு என்றும் போதிக்கின்றது. திரித்துவக் கடவுளின் ஒன்றோடொன்று தொடர்புடைய இம்முப்பெரும் செயல்களும் ஆர்மீனியனிசத்தைப் பொறுத்தவரையில் ஒருங்கிணைந்தவை அல்ல. அவற்றால் ஒருவன் நிச்சயமான இரட்சிப்பை அடைவதில்லை என்பதும் அதன் கருத்து. எனவே, கல்வினிசமும், ஆர்மீயனிசமும் கடவுளின் இரட்சிப்புக்கான திட்டத்தை வெவ்வேறுவிதமாகப் போதிக்கின்றன. கல்வினிசம், மனிதனின் இரட்சிப்பு கர்த்தரின் செயல்களில் தங்கியிருப்பதாகப் போதிக்கின்றது. ஆர்மீனியனிசமோ இரட்சிப்பு மனிதன் எடுக்கும் தீர்மானத்தில் தங்கியிருப்பதாகப் போதிக்கின்றது. கல்வினிசம், கர்த்தர் மனிதனுக்கு அளிக்கும் இரட்சிப்பின் ஒரு பகுதியே விசுவாசம் என்று போதிக்கின்றது. ஆனால், ஆர்மீனியனிசமோ தனது சொந்த இரட்சிப்புக்கான மனிதனுடைய பங்களிப்பே விசுவாசம் என்று கருதுகின்றது. கல்வினிசம், விசுவாசிகளின் இரட்சிப்புக்கான அனைத்து மகிமைகளையும் கடவுளுக்கே அளிக்கின்றது. ஆனால் ஆர்மீனியனிசமோ, அதை மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் பங்கிடுகின்றது." (Introduction to the "Death of Death in the Death of Christ" by J. I. Packer)

பெக்கரின் இவ்விளக்கங்கள் கல்வினிசத்திற்கும் ஆர்மீனியனிசத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை மிகத்தெளிவாக விளக்குகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இவ்விரு வேறு கோட்பாடுகளும் எப்படி ஒரே வேதத்தில் காணப்பட முடியும்? அதை நாம் வேதத்தில் திணித்தால் தவிர வேறுவிதத்தில் பார்க்க முடியாது. ஆகவே, கர்த்தருக்கு மகிமை தராத, மனித சிந்தனையில் உருவான, மனிதனுடைய மகிமையையே இலட்சியமாகக் கொண்டெழுந்த ஆர்மீனியனிசம் ஒரு போலிப் போதனை என்பதை வாசகர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒல்லாந்து சபைகள் இப்போதனையை நிராகரித்து அதைப் போதித்தவர்களை நாடுகடத்தியதற்கு இதுவே காரணம்.

ஆர்மீனியனிசம் திரித்துவக் கடவுளின் பெருஞ்செயல்களான தெரிந்து கொள்ளுதலையும், கிறிஸ்துவின் மீட்பையும், பரிசுத்த ஆவியின் அழைப்பையும் அவற்றை இரட்சிப்பை அடையும் ஆத்துமாவுக்காக கடவுள் செய்த அருஞ்செயல்களாகப் பார்க்காமல், மனித ஞானத்தைப் பயன்படுத்தித் தனித்தனியாகப் பிரித்து தனி மனிதனுடைய சொந்த விருப்பத்திற்கெதிராக எவரையுமே இரட்சிக்க இவ்வருஞ் செயல்களால் முடியாது என்று காட்டுகின்றது. ஆனால், வேதஞ் சார்ந்த கல்வினிசப்போதனைகளின் ஒருங்கிணைந்த போதனைகளின் பிரிக்க முடியாத தன்மையை ஜெக் சீட்டன் பின்வருமாறு விளக்குகிறார்.

> "பாவியாகிய மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாதலால் கர்த்தர் மட்டுமே அவனுக்கு இரட்சிப்பை அளிக்க முடியும். கர்த்தர் மட்டுமே இரட்சிப்பை அளிக்கக் கூடியவராக இருந்தால் அவர் தன் சித்தப்படி சுதந்திரமாக எவருக்கும் அதனை அளிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். கர்த்தர் தன் சித்தப்படி வரையறுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் இரட்சிப்பை அளிப்பதாக ஆணையிட்டிருந்தால் அவர்களுக்காக மட்டுமே கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மீட்பின் செயல்களை நிறைவேற்றியிருக்க முடியும். கிறிஸ்து அவர்களுக்காக மட்டும் மரித்திருந்தால் அவர்கள் இரட்சிப்பை அடையும்படி பரிசுத்த ஆவி அவர்களைத் திட்ப உறுதியாக அழைப்பார். ஆகவே, ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை இரட்சிப்பு கர்த்தரிடம் இருந்து பெறப்படுவதாக இருப்பதால் பரிசுத்தவான்கள் நித்திய ஆனந்தத்தை அடையும்படி விடாமுயற்சியுடன் பரிசுத்தமாக வாழ்வார்கள்." (Jack Seaton, Five Points of Calvinism).

ஜெக் சீட்டனின் இவ்விளக்கம் கல்வினிச ஐங்கோட்பாடுகளின் நிலைநாட்டப்படக்கூடிய தர்க்கரீதியான வாதத்தை விளக்குகின்றது. இதைத் தகர்த்தால் வேதத்தை சிதைத்ததாகிவிடும். வேதம் இணைத்து வைத்திருக்கும் எதையும் நாம் பிரிக்கக்கூடாது.

## கல்வினிச ஐங்கோட்பாடுகள்

கல்வினிச ஐங்கோட்பாடுகள் ஒவ்வொன்றையும் இனி சுருக்கமாக விளக்க வேண்டியது அவசியம்.

### *1. மனிதனின் முழுமையான சீரழிவு*

பாவத்தில் பிறந்த மனிதன் அப்பாவத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று கலிவினிசப் போதனைகள் போதிக்கும்போது, பாவம் மனிதனில் சீரழிக்காத பகுதிகள் எதுவும் இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. "முழுமையான" என்ற வார்த்தை பாவம் மொத்தமாக மனிதனுடைய சித்தம் உட்பட எல்லா அங்கங்களையும் பாதித்துள்ளது என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இத்தகைய பாதிப்பின் காரணமாக மனிதன் கர்த்தரோடு இருந்த ஆத்மீகத் தொடர்பை இழந்து அதை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளும் எந்த வல்லமையும் இல்லாதவனாக இருக்கிறான். மனிதனுடைய சித்தம் சுதந்திரமாக இயங்குகிறதா? என்று கேட்டால் கல்வினிசம் ஆம்! என்றே பதில் தருகின்றது. பாவத்தால் பாதிக்கப்பட்டுள்ள அவனது சித்தம் மிகச்சுதந்திரமாக எவருடைய தடையுமில்லாமல் பாவத்தைச் செய்து வருகின்றது.

ஆனால், அவனால் ஆத்மீகக் காரியங்களைத்தான் செய்ய முடியாதிருக்கின்றது. அதைச் செய்வதற்கான சகல சுதந்திரத்தையும் அவன் தன் பாவத்தால் இழந்து நிற்கிறான். ஆகவே, மனிதன் சுயமாக ஆவிக்குரிய எந்தக் காரியத்தையும் செய்ய இயலாதவனாக இருக்கி-றான். இரட்சிப்பை அடைவதற்கு அவனால் செய்யக்-கூடியது எதுவுமேயில்லை. இதனாலேயே தாவீது, நான் துர்க்குணத்தில் உருவானேன். என்தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என்கிறான் (சங்கீதம் 51:5). அதனால்தான் நம்மாண்டவர் நிக்கொதேமுவைப் பார்த்து, நீ மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கூறினார். அதாவது, பாவத்தில் இருக்கும் நீ உன்னை மாற்றிக் கொள்ள முடியாது. நீ மறுபடியும் ஆத்மீகப் பிறப்படைய வேண்டும் என்று இயேசு சொன்னார்.

## 2. நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளல்

இக்கோட்பாடு கடவுள் உலகத்தோற்றத்திற்கு முன்பாக மனித குலத்திலிருந்து ஒருகுறிப்பிட்ட மக்களை இரட்சிப்பிற்காகத் தெரிந்துகொண்டுள்ளார் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. இவர்கள் மட்டுமே இரட்சிப்பை அடைவார்கள் என்பது இதன் போதனை. இத்தகைய தெரிந்து கொள்ளுதல் மனித-னில் காணப்பட்ட எந்த ஒரு தன்மையின் அடிப்-படையிலும் நிகழவில்லை. தேவனுடைய கிருபையின் அடிப்படையில் மட்டுமே இவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளனர். ஆர்மீனியனிசம், கடவுள் குறிப்பிட்ட மக்கள் தம்மை விசுவாசிப்பார்கள் என்பதை ஏற்கனவே அறிந்து அவர்களைத் தெரிந்து கொண்டுள்ளார் என்று போதிக்கின்றது. அது வேதத்-தில் காணப்படாத தவறான போதனை. சர்வ வல்லமையும் இறை ஆண்மையும் உள்ள நமது தேவன் தனது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற தனது தீர்மானத்தின் படியே சிலரை முன்குறித்து கிறிஸ்துவுக்குள் அவருக்கு சொந்தமாகும் படித் தெரிந்து கொண்டார் என்று வேதம் போதிக்கிறது (எபேசியர் 1:12). கடவுளின் தெரிந்து கொள்ளல் எவரையும் இரட்சிக்கவில்லை; இரட்சிப்பிற்காக அவர்களை நியமித்திருக்கிறது. இப்போதனையை நாம் வேதத்தின் ஏனைய போதனைகளான கடவுளின் உடன்படிக்கை, மனிதனின் பாவம், கிறிஸ்துவின் மீட்பு ஆகியவற்றோடு தொடர்புபடுத்திப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். எபேசியர் முதலாவது அதிகாரம் இப்-போதனையை விளக்கும் ஒரு வேதபகுதியாகும்.

## 3. குறிப்பிட்டவர்களுக்கான மீட்பு அல்லது வரையறுக்கப்பட்ட மீட்பு

இரட்சிப்பிற்காக நியமிக்கப்பட்டவர்கள் இரட்சிப்பை அடைவதற்காக கிறிஸ்துவினால் தங்களுடைய பாவத்-திலிருந்து மீட்கப்பட வேண்டும். இவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காகவே கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் பிதாவின் கட்டளைப்படி நீதிப்பிர-மாணத்தை முழுமையாகக் கைக்கொண்டு தன்னுடைய மக்களுக்காக கல்வாரி சிலுவையில் தன்னைப் பலியாகக் கொடுத்தார். தன்னுடைய மக்களுடைய பிரதிநிதியாக சிலுவையில் தேவ கோபத்தை சந்தித்து அவர்களுடைய பாவங்களைத் தன்மேல் சுமந்து, மரித்து, பூரணமான நீதியை அவர்களுடைய கணக்கில் வைத்தார். தங்களுடைய பாவத்தில் இருந்து மனந்-திரும்பி கிறிஸ்துவை இரட்சகராகவும், ஆண்டவராக-வும் விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாக தேவனால் அறியப்படுகிறார்கள். கிறிஸ்துவின் மீட்பின் செயல்-களாலேயே அவர்கள் நீதிமான்களாக அறியப்படு-கிறார்கள். அத்தோடு அவர்கள் தங்களுடைய பாவத்தி-லிருந்தும், குற்ற உணர்விலிருந்தும் முழுமையாக விடுவிக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சிலுவைப்பலி இவர்களுடைய பாவத்தை முழுமையாக நீக்கி, விடுதலை தந்து, நித்தய ஜீவனையும், நீதியையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

கிறிஸ்துவின் சிலுவை மரணம், கடவுள் பாவிகளை மன்னிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர-வில்லை அல்லது மனிதன் தன்னைத் தானே இரட்-சித்துக் கொள்ளும்வகையில் ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. மனிதன் சுயமாக, தன்னுடைய சொந்த வல்லமையால் பாவத்திலிருந்து மனந்திரும்பும்-போது அவனுக்குப் பலனளிக்கும் வகையில் கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லை. யார் யாருக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தாரோ அத்தனைபேரும் நிச்சயத்-தோடும், உறுதிபோடும் நித்தய ஜீவனை அடையும்படி-யாகவே கிறிஸ்துவின் சிலுவை மரணம் நிகழ்ந்தது. இம்மாபெரும் இரட்சிப்பின் திட்ட நிறைவேற்றுதலில் மனிதன் நிறைவேற்றும்படியான எந்தப் பங்கையும் கடவுள் மனிதனிடம் விட்டுவிடவில்லை. அத்தனை-யையும் கிறிஸ்துவே நிறைவேற்றினார்.

தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் நிறைவேறும்-படியாகவே கிறிஸ்துவின் சிலுவை மரணம் நிகழ்ந்தது. ஆகவே, கிறிஸ்து தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட-வர்களுக்காக மட்டுமே இவ்வுலகத்திற்கு வந்தார். எனவே, அவருடைய சிலுவை மரண பலன்கள் அவர்-களுக்கு மட்டுமே உரிதானது. இப்படிச் சொல்வதால் கிறிஸ்துவின் சிலுவை மரண பலன்களை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. அதை வேதம் போதிக்கும் விதத்தில் மிகவும் உயர்த்தி உள்ளது உள்ளபடியே விளக்குகிறோம். சிலுவையின் பலன்கள், அவர் எவருக்-காக மரித்தாரோ அவர்களுக்கு மட்டுமே சொந்த-மானது என்றுதான் சொல்கிறோம். கிறிஸ்துவின் சிலுவை மரண பலன்களை அவற்றிற்கு சொந்தமான அவருடைய மக்கள் நிச்சயமாக அனுபவித்தே தீருவார்கள் என்றுதான் சொல்கிறோம். அதில் வேறு எவருக்கும் பங்கிருக்க முடியாது.

ஆர்மீனியனிசக் கோட்பாடாளர்கள், கிறிஸ்து உலகில் உள்ள சகல மக்களும் இரட்சிப்பை அடைவதற்காகவே சிலுவையில் மரித்தார் என்றும், ஆனால், அவரை விசுவாசிப்பவர்கள் மட்டுமே இரட்சிப்பை அடைகி-றார்கள் என்று போதிக்கின்றார்கள். இது தவறு. ஏனெனில் கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்திருந்தால் எல்லோருமே இரட்சிப்பை நிச்சயமாக அடைய வேண்டும். ஆனால், எல்லோருமே இரட்சிப்பை அடைவதில்லை என்பது ஆர்மீனியனிசக் கோட்பாட்-டாளருக்கே நன்றாகத் தெரியும். ஏனெனில், சிலர் மனந்திரும்ப மறுத்துவிடுகிறார்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்று சொல்வோமானால், கிறிஸ்துவின் சிலுவை மரண பலன்களின் தரத்தை நாம் குறைத்துவிடுகிறோம். பாவத்திலிருந்து மனந்-திரும்ப மாட்டேன் என்று விடாப்பிடியாக இருந்து மரிப்பவர்களுக்காகவெல்லாம் கிறிஸ்து நிச்சயமாக சிலுவையில் மரித்திருக்க முடியாது. ஆகவே, ஆர்மீனிய-னிசப் போதனை முழுத்தவறானது. அது கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலன்களை அடையவோ அல்லது நிராகரிக்கவோ கூடிய அதிகாரத்தை மனிதனின் கரத்தில் கொடுத்துவிடுகிறது. இது வேதம் போதிக்கும் உண்மையல்ல.

### 4. பரிசுத்த ஆவியின் திட்ப உறுதியான அல்லது தவிர்க்க முடியாத அழைப்பு

**இம்மாபெரும் இரட்சிப்பின் திட்ட நிறைவேற்றுதலில் மனிதன் நிறைவேற்றும்படியான எந்தப் பங்கையும் கடவுள் மனிதனிடம் விட்டுவிடவில்லை. அத்தனையையும் கிறிஸ்துவே நிறைவேற்றினார்.**

திரித்துவத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதில் பங்கேற்றுள்ளார்கள். பிதா உலகத்தோற்றத்திற்கு முன்பே தனது மக்களைத் தெரிந்து கொண்டு தனது குமாரனிடத்தில் அவர்களை ஒப்படைத்தார். குமாரனாகிய இயேசு அவர்களை இரட்சிக்க கல்வாரி சிலுவையில் மரித்து மீட்பின் செயல்களைப் பூரணமாக நிறைவேற்றினார். ஆனால் தெரிந்து கொள்ளுதலும், மீட்பின் செல்களுமான இவ்விரு பெருஞ்செயல்கள் மட்டும் இரட்சிப்பின் தேவனின் திட்டத்தை நிறைவேற்றிவிடவில்லை. இத்திட்டத்தில் உள்ளடங்கிய இன்னொரு அம்சமும் உண்டு. அதாவது, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலன்களை அவருடைய மக்கள் பெற்றுக்கொள்ளும்படியாக பரிசுத்த ஆவியானவர் அவர்களில் செயல்பட்டு அப்பலன்களை அவர்கள் அடையச் செய்ய வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் இச்செயலையே திட்ப உறுதியான அழைப்பு என்று கல்வினிச ஐங்கோட்பாட்டுப்போதனை விளக்குகிறது.

சுவிஷேசத்தின் மூலம் தரப்படுகின்ற அழைப்பை இரண்டுவிதமாக வேதத்தில் பார்க்கிறோம். முதலாவதாக, சுவிஷேசத்தைக் கேட்கும் அனைவருக்குமான பொதுவான அழைப்பு சுவிஷேசத்தின் மூலம் கொடுக்கப்படுகின்றது. மத்தேயு 28:18-20 எல்லோருக்கும் சுவிஷேசம் போதிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறது. அந்த அழைப்பு தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கும், தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஜாதி, மத, குல, இன பேதங்கள் பார்க்காமல் சகல மக்களுக்கும் சுவிஷேசம் பிரசங்கிக்கப்பட வேண்டும். ஆனால், இந்த பொதுவான அழைப்பின் மூலம் பாவிகள் கர்த்தரை விசுவாசிக்கும் வல்லமையற்றவர்களாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களின் கண்களைக்குருடாக்கி, சித்தத்தைப் பாழாக்கி, இருதயத்தைக் கடினப்படுத்தி வைத்திருக்கும் பாவமே. பாவத்தின் கொடுமையால் மனிதன் சுயமாக கர்த்தரிடம் வர முடியாத திக்கற்ற நிலையில் இருக்கிறான். எத்தனை அருமையாகப் பிரசங்கித்தாலும், எச்சரிக்கை செய்தாலும், வாக்குத்தத்தங்களைக் கொடுத்தாலும் இவ்வழைப்பின் மூலம் பாவி பரலோகம் போகும் சக்தியற்றிருக்கிறான். பாவத்தினால் சுவிசேஷத்திற்குக் கட்டுப்படவும், கிறிஸ்துவை விசுவாசிக்கவும் வல்லமையற்றிருக்கிறான். இப்பொதுவான அழைப்பு என்று நான் சொல்வது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதையே குறிப்பிடும்.

ஆகவேதான், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மக்கள் அவரிடம் வரும்படியாக, சுவிசேஷ அழைப்போடுகூடிய விசேடமான திட்ப உறுதியான அழைப்பையும் கிறிஸ்துவின் மக்களுக்குக் கொடுக்கிறார். சுவிசேஷகன் கொடுக்கும் அழைப்பல்ல. இது பரிசுத்த ஆவியானவர் மட்டுமே ஆத்துமாக்களின் இதயத்தைத்தொட்டுப் பேசும் அழைப்பாகும். பரிசுத்த ஆவியானவர் இந்த அழைப்பைக்கொடுக்கும்போது பாவத்தினால் இருண்டு போயிருந்த ஆத்துமாவின் அகக்கண்களைத் திறந்து, சுவிசேஷ உண்மைகளை அவ்வாத்துமா புரிந்து கொள்ளும்படிச்செய்து, மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கான அனைத்துக் காரியங்களையும் ஆவ்வாத்துமாவில் செய்கிறார். இதன் மூலம் ஆத்துமாவின் சித்தம் புதுப்பிக்கப்பட்டு சுதந்திரமாக அவ்வாத்துமாவால் கர்த்தரை விசுவாசிக்க முடிகிறது. பரிசுத்த ஆவியின் செயலால் புதுப்பிக்கப்பட்ட ஆத்துமாவின் மனம் தேவ நீதியை அரவணைத்து அதற்குக் கட்டுப்பட்டு வாழ விரும்புகிறது.

ஆகவே, சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்டு மனிதன் மனம் மாற மறுத்தாலும், பரிசுத்த ஆவியின் திட்ப உறுதியான அழைப்பைத் தவிர்க்கவோ, நிராகரிக்கவோ இயலாதவனாக இருக்கிறான். இதனாலேயே இதற்கு திட்ப உறுதியான அழைப்பு அல்லது தவிர்க்க முடியாத அழைப்பு என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இந்த அழைப்பு தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. இவ்வழைப்பின்மூலமே ஆத்துமா சுதந்திரமாகவும், முழு இருதயத்தோடு கிறிஸ்துவை நேசித்தும் கர்த்தரை நாடி ஓடிவருகிறது

### 5. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி

ஐந்தாவது கல்வினிசக்கோட்பாட்டை பரிசுத்தவான்களின் விடாமுயற்சி என்று அழைக்கிறோம். இதை பரிசுத்தவான்களின் பாதுகாப்பு என்று அழைப்பார்கள். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பாவத்திலிருந்து கிறிஸ்துவால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியால் திட்ப உறுதியாக அழைக்கப்படுவதோடு இரட்சிப்பின் திட்டம் முடிந்துவிடவில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் வகையில் தேவ வல்லமையால் பாதுகாக்கப்படுகிறார்கள். மெய்யாகவே மறுபிறப்படைந்து கிறிஸ்துவை விசுவாசித்து நித்தய ஜீவனைப் பெற்றுக்கொண்ட அனைவரும் நித்தியத்துக்கும் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்படிப் பாதுகாக்கப்படுகிறார்கள். இதையே பரிசுததவான்களின் விடாமுயற்சி என்ற இப்போதனை விளக்குகின்றது.

இப்போதனை கிறிஸ்தவன் என்று தன்னை அழைத்துக் கொள்கிற ஒவ்வொருவரும் நிச்சயம் பரலோகம் சேர்வார்கள் என்று போதிக்கவில்லை. பரிசுத்தவான்கள், அதாவது, பரிசுத்த ஆவியால் மறுபிறப்படைந்தவர்கள் மட்டுமே பரலோகம் சேர்வார்கள் என்று போதிக்கின்றது. விசுவாசி என்று தம்மை அழைத்துக் கொள்கிற அநேகர் விழுந்து போகிறார்கள். ஆனால், இவர்கள் எப்போதுமே தேவ கிருபையைப் பெற்றிருக்காததாலேயே சில காலம் விசுவாசிகள் போல் தோற்றமளித்து பின்பு விழுந்து போகிறார்கள். ஆனால், மெய்யான விசுவாசி சிலவேளைகளில் சோதனைகளுக்குள் அகப்பட்டுத் துன்புற்றாலும், ஒருவேளை பெரிய பாவத்தைக்கூடச் செய்துவிட்டாலும் இச்சோதனைகளும், பாவமும் அவர்கள் இரட்சிப்பை இழந்து போகும்படிச் செய்துவிடாது. ஏனெனில், கர்த்தரின்

**சுவிசேஷம் என்ற பெயரில் பெலேஜிய, ஆர்மீனியனிசப் போதனைகளும், தாராளவாத இறையியலும் மலிந்து தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு கல்வினிசப் போதனைகளோ இன்று வழிகாட்டி வாழ்வளிக்க முடியும்.**

ஆவியின் கிரியைகளால் அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் ஓடிவருவார்கள். இவ்வாறே தாவீதும் கர்த்தரிடம் ஓடிவந்தான்.

அதேவேளை, இப்போதனை மெய் விசுவாசிகள் இரட்சிப்பின் கனிகளைத் தொடர்ந்து பெற்றிருப்பார்கள் என்றும், அவர்கள் விசுவாசத்தில் விடாமுயற்சியுடன் வளர்வார்கள் என்றும் போதிக்கின்றது. அவர்களுடைய வாழ்க்கை ஏனோதானோவென்றிருக்காது. கர்த்தர் தன் வல்லமையால் பாதுகாத்துவரும் விசுவாசிகள் பரிசுத்தத்தில் விடாமுயற்சியுடன் வளர்வார்கள்.

கல்வினிசத்தின் இவ்வைந்து கோட்பாடுகளையும் தனித்தனியாகப் பிரித்து நமக்கு விருப்பமானதை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஐந்து கோட்பாடுகளும் இணைபிரியாதவை. ஒன்றை ஏனையவற்றிலிருந்து பிரிக்க முடியாது. இவற்றில் ஒன்றை மாற்றினாலோ அல்லது அகற்றிவிட்டாலோ ஐந்து கோட்பாடுகளுமே சிதறிப்போய்விடும். இவை ஐந்துமே கிருபையின் போதனைகளை படிப்படியாக விளக்கும் ஐந்து கோட்பாடுகள். சிலர் இவ்வைந்தில் முதலாவது மட்டும் (மனிதனின் முழுமையான சீரழிவு) எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் மற்றதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன் என்பார்கள். இவர்களால் பெலேஜியனிச, செமி-பெலேஜியனிசப் போதனைகளை இன்னும் விடமுடியவில்லை. இவர்கள் மனிதனின் சித்தம் பாவத்தால் கறைபடியவில்லை என்றும், அவனால் சுயமாக கர்த்தருக்காகத் தீர்மானம் எடுக்கமுடியும் என்றும் நம்புகிறார்கள். இதனால்தான் இவர்களால் அர்ப்பண அழைப்புக் கொடுத்து (Altar Call) ஆத்துமாக்களை விசுவாசிக்க வைக்க செய்வதையும், பில்லி கிரெகாமுக்கு துதிபாடுவதையும் இன்னும் விடமுடியாமல் இருக்கிறது.

வேறு சிலர் எங்களுக்கு ஐந்தில் மூன்றாவது மட்டும் (குறிப்பிட்டவர்களுக்கான கிறிஸ்துவின் மீட்பு) பிடிக்கவில்லை. மற்றதையெல்லாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பார்கள். இவர்களாலும் செமி-பெலேஜியனிச, ஆர்மீனியனிசப் போதனையான "கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்தார்" என்ற போலிப்போதனையை இன்னும் கைவிட முடியாமல் இருக்கிறது. இதனால், இவர்களும் தொடர்ந்து அர்ப்பண அழைப்பு கொடுத்து வருகிறார்கள். கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்திருப்பதாலும், எல்லோரும் கிறிஸ்துவை விசுவாசிக்கக்கூடிய வல்லமையைத் தமக்குள் கொண்டிருப்பதாலும் அவர்களால் கிறிஸ்துவை சுயமாக விசுவாசிக்க முடியும் என்று இவர்கள் தவறாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக, ஐந்து கோட்பாடுகளில் சிலவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு ஏனையவற்றை நிராகரிக்கிறவர்கள் கல்வினிச விசுவாசிகள் அல்ல. இவர்கள் கல்வினிசப் போதனைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளாத சந்தர்ப்பவாதிகள். இன்று அனேக பாப்திஸ்துகளும், சகோதர சபைகளைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு அறைகுறை கல்வினிஸ்டுகளாக காட்சி அளிக்கிறார்கள். இவர்கள் மறுபடியும் கல்வினிசப் போதனைகளை முறையாக ஆராய்ந்து படித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை நாம் விளக்கிய கல்வினிசப் போதனைகளை விசுவாசிப்பது இன்று மிக அவசியமாகிறது. சுவிசேஷம் என்ற பெயரில் பெலேஜிய, ஆர்மீனியனிசப் போதனைகளும், தாராளவாத இறையியலும் மலிந்து தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு கல்வினிசப் போதனைகளோ இன்று வழிகாட்டி வாழ்வளிக்க முடியும். பத்தாம் பசலிகள் கட்டிவிட்ட கட்டுக்கதைகளும், வதந்திகளும் கல்வினிசப் போதனைகளைத் தமிழ்க் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்ள முடியாதபடி செய்துவைத்திருக்கின்றன. கல்வினிசப் போதனைகளை அறிந்து போதிக்கும் திருச்சபைகளும், போதகர்களும் தமிழ்ச் சமுதாயத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே. பாரம்பரிய சபைகள் தாராளவாத இறையிலுக்கு மோசம் போய் தறிகெட்டுப் போய்க்கொண்டிருக்க, பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தின் உணர்ச்சித் தூபத்திற்கும் போலிப் பிரசங்கத்திற்கும் அடிபணிந்து வேதம் போதிக்காத கிறிஸ்தவம் என்ற பெயரில் ஒரு மாயவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் கிறிஸ்தவர்கள் விழிப்புணர்வு பெற கல்வினிசப் போதனைகள் இன்று அவசியம். பரிசுத்த ஆவியானவர் மட்டுமே இருண்ட காலத்திலிருக்கும் தமிழ்க் கிறிஸ்தவத்தை இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு கல்வினிசப் போதனைகள் மூலம் கொண்டுவரக் கூடியவர்.

கல்வினிசப் போதனைகளை அறிந்து கொள்வது ஏன் அவசியம் என்பதற்கான நான்கு காரணங்களை இனி பார்ப்போம்.

### *1. மெய்யான சுவிஷேசத்தைக் கல்வினிசப் போதனைகள் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது.*

பென்ஜமின் வார்பீல்ட் (Benjamin Warfield) என்ற சீர்திருத்த இறையியல் அறிஞர், "உலகத்தில் இரண்டுவிதமான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் உள்ளன. ஒன்று விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்னொன்று, மனிதனுடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. கல்வினிசம் முதலாவதின் மொத்த உருவம். பெலேஜியனிசம் இரண்டாவதின் மொத்த உருவம். இவை இரண்டைத் தவிர கிறிஸ்தவ உலகில் காணப்படும் ஏனைய எல்லா விசுவாசங்களும் இவை இரண்டிற்கும் இடையிலான ஒரு மத்தியநிலையைக் காணும் வீணான முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளன என்கிறார்."

கிரியைகளை அடிப்படையாகக் கொண்ட எந்தப் போதனையும் கிறிஸ்தவ சுவிசேஷமாகாது. இன்று சுவிசேஷம் என்ற பெயரில் கூட்டங்களிலும், சபைகளிலும் அளிக்கப்பட்டு வருவது மெய்யான சுவிசேஷமல்ல என்பதைப் புரிந்து கொள்ளக்கூட

முடியாத நிலையில் பலர் இருக்கின்றனர். எப்படியாவது, எதைச்செய்தாவது கிறிஸ்துவுக்கு ஆத்துமாக்களைத் தீர்மானம் எடுக்க வைத்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் கொடுக்கப்படும் செய்திக்கு இன்று சுவிசேஷம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது யோவான் ஸ்நானனும், இயேசுவும், பவுலும், பேதுருவும் போதித்த சுவிசேஷத்திற்கு முரணானது. சிலர் இயேசு வரப்போகிறார் என்று சொல்லிச் சொல்லிப் பயமுறுத்தி ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுக்க வைக்க முயற்சிக்கின்றனர். “தீர்மானம் எடுத்தலையே” முழு நோக்கமாகக் கொண்ட இந்தப் போலிச்சுவிசேஷத்திற்கும் வேதம் போதிக்கும் சுவிசேஷத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு.

பெலேஜியனிசத்தின் அடிப்படையில் வளர்ந்து ஆர்மீனியனிசமாக இன்று காட்சி தரும் இந்தப் போலிப் பிரசங்கத்தால் கர்த்தர் மகிமைப்படுத்தப்படுவதில்லை. கிறிஸ்துவின் மீட்பின் செயல்களின் உன்னதத்தை ஆத்துமாக்கள் அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் கொண்டுவரக்கூடிய பரிசுத்த ஆவியை நம்பி இந்த சுவிஷேசம் கொடுக்கப் படுவதில்லை. இது மனிதனை மகிமைப்படுத்தி, மனிதனுடைய தேவைகளை மட்டுமே மனதில் வைத்து வேதபோதனைகளுக் கெல்லாம் முரணாக சுவிஷேசம் என்ற பெயரில் அளிக்கப்படும் போலிப் பிரசங்கம்.

இன்று இப்போலிச்சுவிஷேசம் காட்டாறு போல் தறிகெட்டுப்பாய்ந்து எத்தனையோ அவலங்களைச் செய்துகொண்டிருக்கின்றது. கத்தோலிக்கப் போதனைகளை இது வேதமாக ஏற்றுக்கொள்கிறது. கிறிஸ்துவின் மீட்பின் இரகசியங்களை அறிவிக்காமல் சுகமளிப்புக் கூட்டங்களையும், எழுப்புதல் கூட்டங்களையும் நடத்தி பரலோக வாழ்வளிக்கும் வியாபாரம் நடத்தி வருகின்றது. ஆத்துமாக்களை ஏமாற்றி தவறான வழியில் போகச் செய்கிறது. சத்தியத்திற்கு மதிப்புக் கொடுக்காமல் பொய்யை சுவிசேஷம் என்ற பெயரில் பிரசங்கித்து வருகின்றது.

ஆனால், கல்வினிச சுவிசேஷம் இதற்கு முற்றிலும் மாறானது. அது கர்த்தரின் இறை ஆண்மையை வலயுறுத்துகிறது. தேவ கிருபையை அள்ளி வழங்கு கிறது. கிறிஸ்துவின் மீட்பின் செயல்களை மகிமைப் படுத்துகிறது. ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு பரிசுத்த ஆவியின் கிரியைகளிலேயே ஆரம்பம் முதல் முடிவுவரை தங்கியிருக்கின்றது. மனித ஞானத்திற்கு கல்வினிச சுவிசேஷத்தில் இடமில்லை. கிரியைகளுக்கு அதில் துளிக்கூடப் பங்கில்லை. பாடல்களைப்பாடி, இசைக்கச்சேரி வைத்து மனித உணர்வலைகளைத் தூண்டிவிட்டு ஆத்துமாக்களைக் கூட்டத்தின் முடிவில் “தீர்மானம்” எடுக்க வைக்க கல்வினிச சுவிசேஷம் முயலாது. கல்வினிச சுவிசேஷம் வேதத்தையே முழுமையாக சார்ந்து நிற்கிறது. மொத்தத்தில் கல்வினிச சுவிசேஷமே மெய்ச்சுவிஷேசம். கல்வினிச ஐங்கோட்பாட்டைக் கவனத்தோடும், முறையோடும் படித்துப் பார்ப்பவர்களுக்கு இது எள்ளளவும் சந்தேகமில்லாமல் புரியும். இப்பத்திரிகையில் இதற்கு முன் வெளிவந்த கிறிஸ்தவன் யார்? என்ற ஆக்கத்தைப் படித்துப் பார்ப்பவர்கள் கல்வினிச சுவிசேஷம் எப்படி இருக்க வேண்டும் என்று புரிந்துகொள்ளலாம். (நூல் வடிவில் உள்ள அல்பர்ட என். மார்டின் எழுதிய அவ்வாக்கத்தை வாசகர்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.).

**2. நமது விசுவாசத்தில் நாம் உறுதி பெற கல்வினிச ஐங்கோட்பாட்டை அறிந்திருத்தல் அவசியம்.**

களிவினிச சுவிஷேசம் இரட்சிப்பிற்கு ஆரம்பம் முதல் முடிவுவரை கர்த்தரிலேயே தங்கியிருப்பதால் விசுவாசிகள் அதன் மூலம் அந்த நிச்சயத்தை அடைய முடிகின்றது. தாங்கள் பெற்றுக்கொண்ட கிருபையை இழந்து போகமாட்டோம் என்ற உறுதியும், நிச்சயமும் அவர்களுக்கு இருக்கும். கிறிஸ்துவின் மீட்பின் அற்புதங்களைக் கல்வினிச சுவிசேஷம் அறிவிப்பதால் விசுவாசி- கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி யடைய தங்கள் சொந்த வல்லமையில் தங்கியிராமல் கிறிஸ்துவில் தங்கியிருக்கிறார்கள். கிறிஸ்துவின் மீட்பின் செயல்களின் அருமை பெருமைகளை கல்வினிச சுவிசேஷம் அறிவிப்பதுபோல் வேறு எந்த சுவிசேஷமும் அறிவிக்காது. கல்வினிச ஐங்கோட்பாடுகள் விசுவாசிக்கு தேவ காரியங்களை முழுமையாக அறிவித்து அவனுக்கு அதிகமான ஆத்மீக மனத்தெம்பை அளிக்கின்றன.

**3. வேதபூர்வமான இறையியல் அறிவைப் பெற்றுக்கொள்ள கல்வினிசப் போதனைகள அவசியம்.**

கல்வினிசப் போதனைகள் விசுவாசிக்கு வேதபூர்வமான இறையியல் போதனையை அளிக்கின்றன. தமிழ் சமுதாயத்தில் இன்று காணப்படும் கிறிஸ்தவத்தில் சத்தியமான இறையியலைப்பார்க்க முடியாதிருக்கின் றது. கல்வினிசப் போதனைகள், விசுவாசி தொடர்ந்து வேத சத்தியத்தில் வளரத் தேவையான அனைத்து உபதேசங்களையும் அளிக்கின்றது. கர்த்தரின் பெரிதான கிருபையையும், அவரது சர்வ வல்லமையையும், கிறிஸ்துவைப்பற்றிய போதனைகளையும் விசுவாசி பெற்று தனது கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர முடிகின்றது. வேதபோதனை எதுவுமே இல்லாமல் உடல் சுகத்தையும், உணர்ச்சியூட்டும் கீதங்களையும், அற்புத, அடையாளங்களையும் நாடி அலைந்து அவற்றின் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர முடியும் என்று போய்க்கொண்டிருக்கின்ற போலிக் கிறிஸ்தவத்தைவிட முற்றிலும் மாறுபாடானது வேதபூர்வமான கல்வினிசக் கிறிஸ்தவம். வேதத்திற்கு மிக உயர்ந்த இடத்தை அளித்து, வேத போதனைகளைத் தெளிவாக அளித்து அவற்றால் மட்டுமே கிறிஸ்தவ வாழ்க்கையில் எவரும் உயர முடியும் என்ற அசையா நம்பிக்கை கொண்டது கல்வினிச கிறிஸ்தவம். கல்வினிசப் போதகன் மட்டுமே வேதத்தில் அதிக கவனம் செலுத்திப் படித்து அநேக முத்துக்களை வாராவாரம் விசுவாசிக்கு சபையில் வழங்கக் கூடியவனாக இருக்கிறான். இதனால் விசுவாசிகள் வாராவாரம் சத்தான போதனைகளைப் பெற்று இறையியல் அறிவைப் பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுகின்றது. கல்வினிசப் போதனைகள் மட்டுமே ஒரு விசுவாசிக்கு உயர்ந்த வேத ஞானத்தை அளிக்க முடியும். சத்தியத்தை சத்தியமாகப் போதிக்க முடியும். சத்தியத்தில் வளரத் துணை செய்ய முடியும். வேதபூர்வமான திருச்சபைகளை அமைக்க முடியும்.

**4. மெய்யான சுவிசேஷ ஊழியத்தை வேதபூர்வமாக கர்த்தரின் மகிமைக்காகச் செய்ய கல்வினிசப் போதனைகளை அறிந்தவர்களாலேயே முடியும்.**

சுவிசேஷத்தைப் பற்றி இன்று பரவலாகக் காணப்படும் எண்ணங்கள் வேதபூர்வமானவையா? என்ற சந்தேகம் பலருக்கும் இன்று ஏற்பட்டிருப்பதைப் பார்த்து நாம் வியப்படைய முடியாது. சுவிசேஷம் சொல்கிறோம் என்ற பெயரில் பெரும் வியாபாரம் தமிழ் உலகில்

நடந்து கொண்டிருக்கிறது. சுயாதீன கிறிஸ்தவ நிறுவனங்கள் வளரவும், சுயாதீன சுவிசேஷப் பிரசங்கிகள் பணம் பண்ணவும் அதிக ஆத்துமாக்களைக் குறுகிய காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வைக்கும் ஒரு வேதமறியாத உத்தியையே சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் இன்று சமூகம் சகித்துக் கொண்டிருக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உள்ளத்தைத் துடிக்க வைக்கும் கண்ணீர்ப் பிரசங்கத்தாலோ அல்லது சுகமளிக்கும் வித்தைகள் செய்தோ, பாட்டுக் கச்சேரிகள் வைத்தோ எப்படியாவது ஆத்துமாக்களை அடிபணியச் செய்து அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்று பெயர் கொடுக்கும் போலித்தனமான ஊழியத்தையே இன்று நாம் சகித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இத்தகைய ஊழியங்களில் பல மோசடி ஊழியங்களாகும். ஆனால், வேதமறியாத அறிவீனத்தால் உள்ளத்தில் பாவ சிந்தனைகள் இல்லாது இதுதான் சுவிசேஷ ஊழியம் என்ற தவறான எண்ணத்தால், மாம்ச முயற்சிகளின் மூலம் ஆத்துமாக்களை வற்புறுத்திக் கிறிஸ்துவிடம் அழைத்துவரும் ஊழியத்தைச் செய்து வருபவர்கள் பலர். இவர்களெல்லோருமே மோசடிக்காரர்களாக இல்லாவிட்டாலும் தாம் ஞானஸ்நானம் கொடுத்த ஆத்துமாக்களுடன் சேர்ந்து இவர்களும் மோசம் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஐந்தாம் நூற்றாண்டில் பெலேஜியனிசமும் அதனைத் தொடர்ந்து செமி-பெலேஜியனிசமும் ஆர்மீனியனிசமும் இத்தகைய போலிச்சுவிசேஷ ஊழியங்களுக்கு வழிவகுத்தன என்பதை இவ்வாக்கத்தின் ஆரம்பத்தில் பார்த்தோம். இப்போதனைகளைப்பின்பற்றியே அமெரிக்காவின் சார்ள்ஸ் பினியின் ***(1792-1875)*** அர்ப்பண அழைப்பு கொடுக்கும் முறை (Altar Call) உருவெடுத்தது. அர்ப்பண அழைப்பு என்பது சுவிஷேசப்பிரசங்கத்தின் முடிவில் அதைக் கேட்டவர்களைக் கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுக்க வைக்கும்படியாகக் கொடுக்கப்படும் அழைப்பாகும். இவ்வழைப்புக் கொடுப்பவர்கள் தீர்மானம் எடுக்கிறவர்கள் பரலோக வாழ்வை அடைகிறார்கள் என்று நம்புகிறார்கள். இதைப் பெற்றெடுத்த பெருமை சார்ள்ஸ் பினியைச் சாரும். அர்ப்பண அழைப்பாகிய குழந்தையை வளர்த்தெடுத்து அதை உலகெங்கும் பிரபலப்படுத்திய பெருமை பில்லி கிரேகமைச் சாரும். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டம் இக்குழந்தையை சீராட்டிப் புத்தாடை உடுத்தி வளர்க்கும் பொறுப்பை ஏற்றது. இக்கைங்கரியத்தை மேற்கத்திய நாடுகளில் ஓரல் ரொபட்சில் இருந்து இன்று பெனி ஹின் வரையும், நம்மக்கள் மத்தியில் தினகரனில் இருந்து எசேக்கியா ஜோன்ஸ் வரையும் திறமையாக நெஞ்சில் ஈரமில்லாமல் செய்து வருகிறார்கள். எந்தவித வேறுபாடுமில்லாமல் பாரம்பரிய சபை, சுயாதீன சபைகள், பாப்திஸ்து, சகோதர சபைகள் என்று இவ்வர்ப்பண அழைப்பு முறை எங்கும் தமிழ்க் கிறிஸ்தவ சமுதாயத்தில் பரவிப் பல்லாண்டுகளாக போலிக் கிறிஸ்தவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

கல்வினிச சுவிசேஷம் இவ்வர்ப்பண அழைப்பு முறையை முற்றாக நிராகரிக்கிறது. கர்த்தரின் இறை ஆண்மையில் முழு நம்பிக்கை வைத்துள்ள கல்வினிச சுவிசேஷம் தேவ கிருபையால் மட்டுமே ஆத்துமா கிறிஸ்துவிடம் வர முடியும் என்று நம்புகிறது. விசுவாசத்தைக் கடவுள் மனந்திருப்புகிறவர்களுக்கு ஈவாகத் தருகிறார் என்று போதிக்கின்றது. ஆரம்பம்முதல் இறுதிவரை ஆத்துமாவின் இரட்சிப்பு கர்த்தரைச் சார்ந்ததாக, கர்த்தரே இலவசமாக அளிப்பதாக இருப்பதால் சுவிசேஷத்தைச் சொல்லும் கடமையைத் தவிர ஆத்துமாவைக் கர்த்தரிடம் வரும்படிச் செய்யும் எந்தப் பணியும் சுவிசேஷம் சொல்கிறவருக்கில்லை என்பதை கல்வினிச சுவிசேஷம் ஆணித்தரமாக விசுவாசிக்கிறது. "இயேசுவை ஏற்றுக்கொள்", "அவர் கரத்தைப் பிடித்துக் கொள்", "உன் இதயத்தை இயேசுவுக்கு கொடு" என்றெல்லாம் ஆத்துமாக்களிடம் பிச்சை கேட்க கல்வினிச சுவிசேஷகனுக்குத் தெரியாது. இயேசுவை ஆத்துமாவிற்கு சுவிசேஷத்தின் மூலம் காட்டி இயேசுவிடம் நித்தய ஜீவனைப் பெற்றுக் கொள்ள ஓடு! என்றுதான் கல்வினிச சுவிசேஷகன் பிரசங்கிப்பான். இயேசுவிடம் போக ஆத்துமாவிற்கு சுவிசேஷத்தின் மூலம் வழியைக் காட்டுவது மட்டுமே தனது வேலை என்பதை கல்வினிச சுவிசேஷகன் நன்றாக அறிந்திருக்கிறான். எனவே, கல்வினிச சுவிசேஷப் பணிக்கும் ஆர்மீனியனிச சுவிசேஷப்பணிக்கும் பெரும் வேறுபாடுண்டு. கல்வினிச சுவிசேஷப் பணி ஆத்துமாவின் இரட்சிப்புக்காக கர்த்தரில் தங்கியிருக்கிறது. ஆர்மீனிய சுவிசேஷப்பணி ஆத்துமாவின் இரட்சிப்புக்கு ஆத்துமா எடுக்கக்கூடிய தீர்மானத்தில் தங்கியிருக்கிறது. அடிப்படையிலேயே இவ்விரண்டு கோட்பாடுகளுக்குமிடையில் பெரும் வேறுபாடுண்டு. இதில் கல்வினிச சுவிசேஷம் வேதபூர்வமானது ஆர்மீனிய சுவிசேஷம் போலியானது.

அர்ப்பண அழைப்புக் கொடுத்து தீர்மானம் எடுக்க வைத்தால் மட்டுமே ஆத்துமா இரட்சிப்பை அடைய முடியும் என்று நம்புவது மடமை. இம்முறையை வேதத்தில் எங்குமே காணமுடியாது. இயேசு இப்படிப்பட்ட காரியத்தை செய்ததில்லை. பவுலும் இதைச் செய்யவில்லை. இது மனித ஞானத்தின் விளைவு. இது மனித சித்தம் பாவத்தால் பாதிக்கப்படாது சுதந்திரமாக இயங்கி கர்த்தரை அறிந்து கொள்ளக்கூடிய வல்லமை கொண்டிருக்கிறது என்ற பொய்யை நம்பியதால் ஏற்பட்ட விளைவு. இந்நம்பிக்கையால் ஆத்துமாவை மனதை அசைத்து எப்படியாவது கூட்ட முடிவில் தீர்மானம் எடுக்க வைக்க பெரும்பாலான சுவிசேஷகர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். இம்முறையைக் கடைப்பிடிப்பதால் போலிக் கிறிஸ்தவர்கள் உருவாவதே அதிகமாகும். ஏனெனில், மெய்யாக கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களை எதையோ பேசியும், பாடியும், சுகமளிப்பதாக சொல்லியும் தீர்மானம் எடுக்க வைப்பதால் மெய்க்கிறிஸ்தவர்கள் உருவாவதில்லை. இப்படித் தீர்மானம் எடுத்தவர்கள் பரலோகம் போவதில்லை. அவர்களால் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாது.

கல்வினிசப் போதனைகளை அறிந்திருப்பதால் சுவிசேஷப்பணியை திருச்சபைகள் வேதபூர்வமாக செய்யமுடியும். கல்வினிசப் போதனைகள் சுவிசேஷம் சொல்வதற்கு உதவாது என்ற வதந்தி பற்றி நமக்குத் தெரியும். இது கல்வினிசப் போதனைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் உண்டாக்கிய கட்டுக்கதை. உண்மையில் கல்வினிசப் போதனைகளை அறிந்தவர்களால் மட்டுமே கர்த்தரை மகிமைப்படுத்தும் விதமாக வேதபூர்வமாக சுவிசேஷம் சொல்ல முடியும். கல்வினிசப் போதனைகளை அறிந்தவர்கள் மட்டுமே கர்த்தர் நிச்சயம் தனது மக்களை இரட்சிப்பார் என்ற விசுவாசத்துடன் சுவிசேஷப்பணி செய்ய முடியும். ஆர்மீனிய சுவிசேஷகனால் இத்தகைய விசுவாசத்துடன் ஊழியம் செய்ய முடியாது. அவன் ஆத்துமா-

(17 ஆம் பக்கம் பார்க்க)

# சுருக்கமாக

## பெலேஜியனிசம்

ஐந்தாம் நூற்றாண்டில் பெலேஜியஸ் (Pelegius) என்ற இங்கிலாந்துத் துறவியின் போதனையில் உருவான கோட்பாடு. இது மனிதன் பாவியல்ல என்று நிர்த்தாட்சன்யமின்றிப் போதிக்கிறது. ஆதாம் தான் செய்த பாவத்தால் மனிதனுக்கு தவறான வழிகாட்டியாக இருந்தானே தவிர அவனுடைய பாவத்தால் வேறெந்தவிதமான பாதிப்பும் மனிதனுக்கு ஏற்படவில்லை என்பது பெலேஜியனிசத்தின் (Pelegianism) போதனை. பெலேஜியஸ் உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பிருந்த நிலையிலேயே பிறப்பதாகப் போதித்தான். ஆகவே, மனிதனுடைய சித்தம் பாவத்தினால் எந்தவித பாதிப்பும் அடையாமல் முழுச்சுதந்திரத்தோடு இயங்குகிறது என்றும், சுவிசேஷத்தை ஏற்று கடவுளை நம்புகிற வல்லமையை, புறத்தூண்டுதல்களின் அவசியமின்றி, மனிதன் தனக்குள்ளேயே கொண்டிருக்கிறான் என்றும் பெலேஜியனிசம் போதிக்கின்றது. ஆகஸ்தீன் (Augustine) இப்போதனையை எதிர்த்து வேதம் போதிக்கும் கிருபையின் போதனைகளை நிலைநாட்டினார்.

## செமி-பெலேஜியனிசம்

இக்கோட்பாட்டை உருவாக்கியவன் கேசியன் (Cassian) என்பவனாகும். ஆகஸ்தீனின் ஆணித்தரமான வாதங்களால் பெலேஜியனிசம் மூச்சுத்தினறி மடிந்தது. ஆனால், ஓர் புதிய போதனை உடனேயே உருவானது. இப்போதனை பெலேஜியனிசத்திற்கும் வேதம் போதிக்கும் கிருபையின் போதனைகளுக்கும் இடைப்பட்ட மத்தியநிலையில் இருந்தது. கேசியன், மனிதன் தனது மனந்திரும்புதலுக்கான ஆரம்ப நடவடிக்கையை எடுக்கும் வல்லமையைத் தனக்குள் கொண்டிருக்கிறான் என்று போதித்தான். மனிதனின் இவ்வாரம்ப நடவடிக்கைக்கு பரிசுத்த ஆவி உதவும்போது மனிதனால் கிறிஸ்துவை விசுவாசிக்க முடிகிறது என்பது கேசியனின் போதனை. இப்போதனை பெலேஜியனிசப் போதனையை மாற்றி அமைத்து உருவானதால் செமி-பெலேஜியனிசம் (Semi-Pelegianism) என்ற பெயரைப் பெற்றது. இப்போதனை அகஸ்தீனின் போதனையையும், பெலேஜியனின் போதனையையும் பயன்படுத்திக் கொண்டது. பாவம் மனிதனின் எல்லாப் பகுதிகளையும் பாதித்துள்ளது என்பதை இக்கோட்பாடு ஏற்றுக் கொண்டாலும், கடவுள் கிருபையை எல்லா மனிதர்களுக்கும் எந்தவித பாரபட்சமுமில்லாமல் கொடுக்கிறார் என்றும், ஒவ்வொரு ஆத்துமாவும் இரட்சிப்பை அடைவதற்கான சுயாதீன சித்தத்தைக் (Free-Will) கொண்டிருந்து கிறிஸ்துவை விசுவாசிக்கும் தீர்மானத்தை எடுக்கக்கூடியதாக இருக்கின்றது என்றும் இக்கோட்பாடு போதிக்கின்றது.

## ஆர்மீனியனிசம்

ஜேம்ஸ் ஆர்மினியஸ் (James Arminius) இப்போதனைக்கு வடிவம் தந்தான். செமி-பெலேஜியனிசத்தைத் தழுவி இப்போதனை அமைந்தது. இப்போதனையும் தனிமனிதன் சுயாதீன சித்தத்தைக் கொண்டிருந்து கிறிஸ்துவை விசுவாசிக்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறான் என்று போதிக்கின்றது. மனிதனுடைய இரட்சிப்பு கர்த்தரில் அல்லாமல் மனிதனிலேயே இறுதியில் தங்கியுள்ளது என்பதே இப்போதனை. இதன் அடிப்படையில் ஆர்மீனியனிசம் (Arminianism) வேதத்தின் போதனைகளுக்கு விளக்கங்கொடுக்கிறது. கிறிஸ்து எல்லோருக்குமாக மரித்தார் என்பது இதன் போதனை. அவருடைய சிலுவைப்பலன்களை அனுபவிப்பதும், அனுபவிக்காததும் மனிதனுடைய கையிலேயே தங்கியுள்ளது என்கிறது இக்கோட்பாடு. மொத்தத்தில் மனிதனை மகிமைப்படுத்தி கர்த்தரை அவனுடைய சித்தத்தின் வழி நடத்துதல்களுக்கு துணைபோகும் தேவனாகக் காட்டுகிறது ஆர்மீனியனிசம். சீர்திருத்த சபைகளைவிட தமிழ் சமுதாயத்தில் காணப்படும் ஏனைய திருச்சபைகள், கிறிஸ்தவ நிறுவனங்கள், சுயாதீன ஊழியங்கள் அனைத்தும் இன்று செமி-பெலேஜியனிச, ஆர்மீனியக் கோட்பாடுகளைப் பின்பற்றியே நடந்து வருகின்றன.

## கல்வினிசம்

புரட்டஸ்தாந்து சீர்திருத்தவாத தலைவர்கள் பதினாறாம் நூற்றாண்டில் பெலேஜிய, செமி-பெலேஜியனிசக் கோட்பாடுகளை முற்றாக நிராகரித்தனர். ஆகஸ்தீனைப் போல சீர்திருத்தவாத தலைவர்கள் கர்த்தருடைய இறை ஆண்மையையும், மனிதனுடைய முழுச்சீரழிவையும், நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளுதலையும் விசுவாசித்தனர். ஆர்மீனியனிசம் மனிதனை மகிமைப்படுத்த கல்வினிசம் (Calvinism) கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. டோர்ட் கவுன்சில் ஆர்மீனியனிசத்திற்கு எதிராக வெளியிட்ட கல்வினிச ஐங்கோட்பாடுகள் தனித்தனியாக ஐந்து கோட்பாடுகளாக இருந்தாலும், அவை ஒன்றோடொன்று இணைந்து பிரிக்க முடியாதபடி அமைந்துள்ளன. அவற்றில் ஒன்றைத் திருத்தவோ, மாற்றவோ முயற்சித்தாலும் ஏனைய கோட்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்படும். அவை கர்த்தர் மட்டுமே இரட்சிப்பின் தேவன் என்றும், அவரால் மட்டுமே ஆத்துமாவை இரட்சிக்க முடியும் என்றும் போதிக்கின்றன.

---

**கல்வினிசப் போதனைகளை (கிருபையின் போதனைகள்) அறிந்துகொள்ள துணை செய்யக்கூடிய தமிழ் நூல்கள்:**

1. *சர்வ வல்லவரின் ஏகாதிபத்தியம் - ஆர்தர் பிங்க் (தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்)*
2. *கிருபையின் மாட்சி - ஆபிரகாம் பூத் (கு. பா. வெ)*
3. *கிருபையின் அருட் செல்வம் (கு. பா. வெ)*
4. *கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு - ஜோன் ஓவன் (கு. பா. வெ)*
5. *பிறவி அடிமைகள் - மார்டின் லூதர் (கு. பா. வெ)*
6. *ஸ்பர்ஜன் பிரசங்கங்கள் (கு. பா. வெ)*
7. *தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு - ஜேம்ஸ் அடம்ஸ் (சவரின் கிரேஸ் வெளியீடுகள், நியூசிலாந்து)*
8. *கிறிஸ்தவன் யார் - அல்பர்ட் என். மார்டின் (சவரின் கிரேஸ் வெளியீடுகள், நியூசிலாந்து)*

**தமிழ் பாப்திஸ்து வெளியீடுகளை E.L.S புத்தக நிலையத்தில் சென்னையில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது**
**10. Bronson Garden Road, Kilpauk, Chennai 600 010 என்ற முகவரிக்கு எழுதவும்.**

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கேள்வி: 54 இரண்டாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?*

*பதில்: இரண்டாம் கட்டளை கடவுளை உருவங்களைப் பயன்படுத்தியும், வேதம் போதிக்காத வேறு எந்த முறையிலும் அவரைஆராதிப்பதைத் தடை செய்கிறது.*

*உபாகமம் 4:15-16; லேவியராகம் 10:1-2; கொலோசேயர் 2:18.*

*கேள்வி: 55 இரண்டாம் கட்டளையை வலியுறுத்தும் காரணிகள் யாவை?*

*பதில்: கடவுள் நம்மீது சகல அதிகாரத்தையும் செலுத்து-கிறார் என்ற உண்மையும், நாம் அவருடைய சொத்தாக இருக்கிறோம் என்பதும், தனது ஆராதனையின் மீது அவருக்கு இருக்கும் தீவிர பற்றுமே இரண்டாம் கட்டளைக்கான காரணிகளாக இருக்கின்றன.*

*சங்கீதம் 95:2-3; 45:11; யாத்திராகமம் 34:14*

**விளக்கக்குறிப்பு:** இரண்டாம் கட்டளை பொதுவாக இன்று எங்கும் மீறப்படுவதைப் பார்க்கிறோம். மனிதன் உருவங்-களையும், படங்களையும் பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவை வழிபட முயல்கிறபோது இரண்டாம் கட்டளை மீறப்படுகின்-றது. வேதம் கடவுள் ஒருவரே என்றும், அவரில் பிதா, குமாரன் ஆவி என்ற மூன்று நபர்கள் சமமான அதிகாரத்-தையும் வல்லமையையும் கொண்டவர்களாக உள்ளனரென்-றும், இம்மூவரையும் ஒரே தேவனாக நாம் வழிபட வேண்டும் என்றும் போதிக்கின்றது. தேவன் ஆவியாக இருக்கிறார் அவரை நாம் ஆவியாலும், வார்த்தையாலும் ஆராதிக்க வேண்டும் என்றும் போதிக்கின்றது. கடவுள் மனிதனால் தங்கத்தாலும், வெள்ளியாலும், கல்லாலும் உருவாக்கப்படும் சிலையல்ல என்று பவுல் அப். 17:29 இல் நினைவுறுத்து-கிறார். ஏசாயா தீர்க்கதரிசி 40:18 இல், கடவுளை யாரோடு ஒப்பிட முடியும்? என்று கேட்கிறார். ரோமர் முதலாவது அதிகாரத்தின் இரண்டாம் பகுதி மனிதன் உருவங்களை வழிபடுவதற்கான காரணங்களை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன (ரோமர் 1:21–25).

சீர்திருத்தவாதிகள் உருவ வழிபாட்டின் ஆபத்தை உணர்ந்-திருந்தனர். ரோமன் கத்தோலிக்க மதம் உருவ வழிபாட்டை ஏற்படுத்தி இரண்டாம் கட்டளையை மீறியது. ரோமன் கத்தோலிக்க மதம் இச்சிலைகளின் மூலம் மக்கள் கடவுளையே வணங்குகின்றனர் என்ற பத்தாம் பசலித்தன-மான வாதத்தை தொடர்ந்து கூறி வருகிறது. ஆனால் சிலைகளையோ, படங்களையோ வைத்து கடவுளை ஆராதிப்பதையும் அவரை நினைவுபடுத்திக் கொள்வதையும் இரண்டாம் கட்டளை முற்றாகத் தடை செய்கிறது. சிலுவையை அடையாளமாக வைத்துக் கொள்வதையும் இக்கட்டளை தடைசெய்கிறது. இன்று தமிழ் கிறிஸ்தவர்-களில் அநேகர் இவற்றால் ஏற்படும் பாதிப்புகளையும், இரண்டாம் கட்டளையைத் தாம் அன்றாடம் மீறிக்கொண்-டிருப்பதையும் உணர்வதில்லை. இவர்கள் வேதத்தைப் படித்துப் புரிந்து கொள்ள முயலாமல் சந்தர்ப்பவாதிகளாக இதனாலெல்லாம் பெரிய ஆபத்தில்லை என்ற முறையில் நடந்து வருகிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அநேகருடைய வீட்டுச் சுவர்களை இயேசுவின் படம் இன்று அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. கத்தோலிக்க சபைகளல்லாத சுவிசேஷ சபைக்கட்டடங்-களையெல்லாம் சிலுவை அலங்கரித்துக் கொண்டிருக்கின்-றது. ஏன் சிலுவை வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டால், அதை வைத்து கர்த்தரை நாம் ஆராதிக்கவில்லை, கிறிஸ்-தவ சபை என்று நம்மை மக்கள் அறிந்து கொள்ள சிலுவை உதவுகிறது என்று பதில் கொடுப்பார்கள். இதைவிடப் பெரிய ஆபத்து என்ன இருக்க முடியும்? எதை வைத்து வணங்-காதே என்று ஆண்டவர் கட்டளையிட்டிருக்கிறாரோ அதை வைத்தே அவருடைய சபை இது என்று கூறப்பார்ப்பது எத்தனை பெரிய தவறு! இதைவிடப் பெரிய இறுமாப்பு இருக்க முடியாது. சிலுவையை அடையாளமாக வைத்திருக்-கிற சபைகள் தொடர்ந்து ரோமன் கத்தோலிக்க ஆராதனை முறைகளையே மக்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்றன என்பதை ரோமன் கத்தோலிக்க சபைகள் அல்லாத சபைகள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சீர்திருத்த விசுவா-சத்தைப் பின்பற்றும் சபைக் கட்டடங்களை சிலுவை ஒரு-போதும் அலங்கரிக்கக்கூடாது.

“கடவுளை நினைவுபடுத்தும் ஏதாவதொரு உருவத்தைத் தேடிக்கொண்டாலொழிய மாம்சம் திருப்தியடைவதில்லை” என்று ஜோன் கல்வின் எழுதுகிறார். தேவன் நமக்குத் தந்திருக்கிற திருவிருந்தையும், திருமுழுக்கையும் தவிர வேறு எதன் மூலமும் அவரை நினைவுபடுத்திக் கொள்ளப்-பார்ப்பது கடவுளை அறியாதவர்களுடைய ஆராதனைக்-கொப்பானது. அநேக சபைகள் சிறுவர்களுக்கு இயேசுவைப்-பற்றிச் சொல்லிக் கொடுக்க இது பெரிதும் உதவுகிறது என்ற காரணத்தைக் கூறுவார்கள். சிறுவர்களுக்கு இயேசுவின் படமில்லாமல் அவரை அறிந்து கொள்ள முடியாது என்று வேதம் எங்கே போதிக்கிறது? இது சிறுவர்களைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தவறான எண்ணமே தவிர சிறுவர்களால் படமில்லாமல் கடவுளை நிச்சயம் அறிந்து கொள்ள முடியும். படங்களை வைத்து இதுதான் இயேசு என்று காட்டிவிட்டு இரண்டாம் கட்டளை-க்கு எப்படி விளக்கம் கொடுக்க முடியும்? சிறுவர்களுக்கு படம் வைத்து இவர்தான் கடவுள் என்று காட்டுவது பச்சை பொய் என்பதையும், அது பத்துக் கட்டளையை மீறும் காரியம் என்பதையும் புரிந்துகொண்டால் சரி. சிறுவர்-களுக்கு இயேசு படத்தை அறிமுகப்படுத்தும் காரியம் முதன் முதல் ஞாயிறு பாடசாலைகள் மூலமே ஏற்பட்டது. இயேசு இப்படித்தான் இருப்பார் என்று நினைத்து வளரும் குழந்தைகள் பின்னால் அவரை எப்படி ஆவியாலும், வார்த்தையாலும் ஆராதிக்கப் பழக முடியும். “தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை” என்று சும்மாவா சொன்னார்கள். சிறுவர்களை சின்ன வயதில் இருந்தே நாம் பொய்யில் வளர்க்கலாமா? என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் இயேசு படம் வைத்து நான் எப்போதுமே ஆண்டவரைப் பற்றிப் போதித்ததில்லை. சிறுவயதிலேயே கிறிஸ்துவை அறிந்து கொண்டு அவருக்குள் வளர்ந்து கொண்டிருக்கிற இருவருக்கும் இயேசு படமில்லாதது எப்போதுமே ஒரு குறையாக இருக்கவில்லை.

ஜீ. ஐ. வில்லியம்சன், என்ற சீர்திருத்த போதகர் சிறுவர்-களுக்கு இயேசுபடம் வைத்து போதிப்பது எத்தனை தவறா-

னது என்பதற்கு பின்வரும் விளக்கங்களைத் தருகிறார்:

1. நமக்கு இயேசு எப்படி இருந்திருப்பார் என்பது தெரியாது. அவருடைய உருவத்தோற்றம் எப்படி அமைந்திருந்திருக்கும் என்பதும் தெரியாது. யாரோ ஒரு படத்தை வரைந்து இதுதான் இயேசு என்று கூறும்போது அது, "மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது" (எரேமியா 51:18).

2. இவ்வாறு ஒரு படத்தை வைத்து அது இயேசு என்று காட்டும்போது நாம் அவருடைய மானுடத் தன்மையை, தெய்வீகத் தன்மையிலிருந்து பிரித்துக் காட்ட முயல்கிறோம். இயேசு மனிதராகவும் கடவுளாகவும் இருக்கிறார். அவருடைய இணைபிரியாத இவ்விருதன்மைகளையும் நாம் எப்போதுமே பிரிக்க முயலக்கூடாது.

3. இயேசுவைப்பிரதிபலிக்கும் படங்களை நாம் நாடும்போது வேதத்தை மதிக்க மறுக்கிறோம். பரிசுத்த வேதம் மட்டுமே "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்கதாக" இருக்கின்றது. வேதம் மட்டுமே நம்மைத் தேவமனிதனாக்கக் கூடியதாக இருக்கின்றது. இயேசுவின் படங்கள் நமக்குத் தேவையில்லை.

4. பரிசுத்த ஆவியின் மூலமாகவே வேதத்தை நம்மால் புரிந்து கொண்டு "கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறதுபோல்" (2 கொரி. 3:18) பார்க்க முடிகிறது. பரிசுத்த ஆவியானவர் வருகின்றபோது நமக்கு எல்லாவற்றையும் போதிப்பார் (யோவான் 16:14) என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். இயேசுவின் தோற்றத்தை படங்கள் மூலமாக பிரதிபலிக்க முயலும்போது நாம் பரிசுத்த ஆவியை அவமதிக்கிறோம். இயேசுவை நமக்கு வெளிப்படுத்துவது பரிசுத்த ஆவியின் மகிமையாகிருக்கிறது.

இன்று தமிழர்கள் மத்தியில் Visual Aids வைத்து கிறிஸ்தவ விளக்கம் கொடுப்பது அதிகரித்து வருகிறது. Visual Aids களில் எந்தத்தீமையும் இல்லாவிட்டாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்கள் சரியாக இருக்க வேண்டும். சினிமா பார்த்து பழகிய மக்களுக்கு இயேசுவைபற்றிப் போதிக்க சுலபமாக இருக்கும் என்ற எண்ணத்தில் இவற்றைச் சிலர் செய்வதாக இருக்கலாம். சிலர் எழுத்தறிவில்லாத கிராமப்புற மக்களுக்கு இது உதவும் என்ற எண்ணத்திலும் செய்கிறார்கள். இதனால் வேதத்தில் அநேகருக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. ஆத்துமாக்கள் சத்தியத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் எதாவது படத்தைக் காட்டியாக வேண்டும் என்ற எண்ணம் அநேகர் மனதில் ஊறிப்போயிருக்கின்றது. எந்த Visual Aids ஐப் பயன்படுத்தினாலும் இயேசுவைப் படத்தில் காட்டி கடவுள் இப்படித்தான் இருப்பார் என்று காட்டுவது பெருந்தவறு. இதைவிட வேதத்தில் நம்பிக்கை வைத்து அதை விளக்கிப் போதிக்க போதகர்களும், சுவிசேஷம் சொல்கிறவர்களும், ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களும் முயல வேண்டும். இரண்டாம் கட்டளை இயேசுவை வேதம் போதிக்கும் வழிகளில் தவிர வேறு எந்தவிதத்திலும் ஆராதிப்பதையும், ஆராதிக்கும்படி மற்றவர்களைத் தூண்டுவதையும் கண்டிக்கிறது. இயேசு படம்தானே காட்டுகிறோம், அது ஆராதனையில்லையே! என்ற விதண்டாவாதம் வேண்டாம். இயேசு இப்படித்தான் இருக்கிறார் என்று பொய் சொல்வது பெரிய தவறில்லையா? கர்த்தரின் மகிமையைக் குறைவுபடுத்த முயற்சிப்பது தேவநிந்தனை செய்வதாகும்.

சர்வ வல்லமையுள்ள பரிபூரணமானவரான நமது தேவன் தன்னுடைய மகிமையை வேறு எவருடனுமோ அல்லது எதனுடனுமோ பகிர்ந்து கொள்ள மாட்டார் என்று பத்துக் கட்டளைகளில் சொல்லியிருப்பதின் பொருளை நாம் நன்றாகப் புரிந்து கொண்டால் மட்டுமே நாம் அவரை ஆராதிக்கும் முறைகளில் அதிக கவனம் செலுத்துவோம். இரண்டாம் கட்டளையை நாம் மிகவும் கவனமாக தியானித்துப் படிக்க வேண்டியது அவசியம்.

## சீர்திருத்த போதனையளிக்கும் இறையியல் கல்லூரி
## (School of Theology)

தமிழகத்திலுள்ள திருச்சபைப்போதகர்கள், மூப்பர்கள், போதக ஊழியத்திற்கு (சபையின் அனுமதியுடன்) தம்மைத் தயார் செய்து கொண்டிருப்பவர்களுக்காக சீர்த்திருத்த போதனைகளை (Reformed Doctrines) அளிக்கும் இறையியல் வகுப்பு அடுத்த வருடம் (2002) நடக்கவிருக்கிறது. ஜூலை மாத ஆரம்பத்தில் பத்து நாட்களுக்கு நடக்கவிருக்கும் இவ்வகுப்புகளில் போதக ஊழியம் (பிரசங்கம் தயாரித்தல்), பழைய ஏற்பாட்டு அறிமுகம், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், 1689 விசுவாச அறிக்கை போன்றவற்றுடன் புதிய ஏற்பாட்டு கிரேக்கமும் வேறு சில பாடங்களும் போதிக்கப்படும். பாடங்கள் முழுநாளும் நடைபெறும். கல்லூரி நடைபெறும் நாட்களில் ஊழியம் செய்பவர்களுக்கு அவசியமான நல்ல பயனுள்ள கிறிஸ்தவ நூல்களும் விற்பனைக்கு இருக்கும்.

வேதத்தை மட்டுமே மையமாகக்கொண்டு அதன் அதிகாரத்திற்குற்பட்டே எல்லாப் பாடங்களும் போதிக்கப்படும். மனித ஞானத்திற்கு இதில் இடமிருக்காது. பாடங்களும், போதனைகளும் திருச்சபை ஊழியத்தையும், போதக ஊழியத்தையும் கருத்தில் கொண்டு அமைந்திருக்கும். வேத அடிப்படையிலான சீர்திருத்த போதனைகளைக் கற்றுக் கொள்ளவும், போதக ஊழியத்தில் வளரவும் ஆர்வமுள்ள எந்த சபைப்பிரிவைச் சேர்ந்தவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

இவ்வகுப்புகளுக்கு ரூபா 50/- பதிவுக்கட்டணம். இது பாடக்குறிப்புகளுக்காக வசூலிக்கப்படுகிறது. பதிவுக்கட்டணத்தை கல்லூரி ஆரம்பிக்கும் நாளில் செலுத்தலாம். தங்கும் வசதி, உணவு அனைத்தும் இலவசமாக அளிக்கப்படும். குறிப்பிட்ட தொகையினருக்கே இடமிருப்பதால் உடனடியாக விண்ணப்பித்து பதிவு செய்து கொள்வது நல்லது. எல்லாப் பாடங்களிலும் தவறாமல் கலந்து கொள்ள முடிந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களைத் தவறாமல் அடுத்த வருடம் (2002) மார்ச் மாத இறுதிக்குமுன் கிடைக்கும்படி அனுப்புங்கள். விண்ணப்பங்களைத் தமிழிலேயே அனுப்பலாம். விண்ணப்பிக்கும்போது உங்களுடைய சபை ஊழிய விபரங்களையும் தவறாது எழுதி அனுப்பவும். விண்ணப்பிப்பவர்களுக்கு ஏனைய விபரங்கள் அனைத்தும் அனுப்பி வைக்கப்படும். முகவரி:

**School of Theology**
**P O Box 62 159**
**Sylvia Park**
**Auckland 1006**
**New Zealand**

# இரண்டாம் நூற்றாண்டு

**திருச்சபை வரலாறு பற்றி எழுத வேண்டுமென்று அநேகர் பல வருடங்களாகவே கேட்டு வந்துள்ளனர். தமிழில் முறையாக எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல்கள் இல்லை. இருப்பவையும் ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடிப்படையில் எழுதப்பட்டு சீர்திருத்த காலத்தை வேண்டத்தகாததாகவே படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்தியாவில் இருந்து ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள சபை சரித்திர நூல்களும் இதே வகையில்தான் எழுதப்பட்டுள்ளன. சமீபத்தில் செராம்பூர் கல்லூரி நிறுவாகத்தினரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்திய திருச்சபை சரித்திர நூல் ஒன்றை நான் பெற்று வாசிக்க முடிந்தது. இதில் ரோமன் கத்தோலிக்க சபை கிறிஸ்தவ சபையாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சீர்திருத்த விசுவாசத்தின் அரும் பெருமைகளையும், அதன் அவசியத்தையும் வாசகர்கள் புரிந்து கொள்ள திருச்சபை வரலாறு அவசியம் என்பதனாலும், சீர்திருத்த, சுவிஷேச இயக்கத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல் ஒன்று தமிழில் இல்லாத குறையைத் தீர்ப்பதற்காகவும் இப்பக்கங்களில் தொடர்ந்து திருச்சபை வரலாறு பற்றி எழுதத் தீர்மானித்துள்ளேன். சீர்திருத்தப் போதனைகள் வளர இதைக் கர்த்தர் பயன்படுத்துவாராக! – ஆசிரியர்**

*முதலாவது நூற்றாண்டு முடிவடைவதற்குள் சுவிஷேசம் யெருசெலேமுக்கு வெளியில் பல நாடுகளுக்கும் பரவி இருந்தது. எந்தவித எதிர்ப்பாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கிழக்குப் பகுதிகளில் மெசப்பொடேமியா, பார்தியா வரையும் சுவிசேஷம் பரவியிருந்தது. மேற்கு நாடுகளில் பிரான்ஸ், ஸ்பெயின்வரை பரவியிருந்தது. திருச்சபை ரோம், கார்த்தேஜ், அலெக்சான்டிரியா போன்ற நகரங்களில் பெரும் வளர்ச்சியடைந்திருந்தது. அந்தியோகியா, எபேசு, கொரிந்து பட்டணங்களில் சபை வல்லமையுடன் விளங்கியது. கிறிஸ்தவர்கள் அரேபியா, இல்லிரியை, சிரியா போன்ற இடங்களெல்லாம் பரவியிருந்தனர். எழுபது வருடங்களில் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் சபை வளர்ந்து வந்தது.*

*ஆனால், இரண்டாம் நூற்றாண்டின் முதல் எழுபது வருடங்களும் திருச்சபை வரலாற்றில் தெளிவற்ற ஒரு நிலை காணப்பட்டது. இக்காலத்தின் ஆரம்பப் பகுதியில் அப்போஸ்தலனான யோவான் மரணமடைந்தார். டொமிஸியன் என்ற ரோம பேரரசன் காலத்தில் பெத்மோஸ் தீவில் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்து வந்த யோவான், டொமிஸியன் 96 இல் இறந்தபின் மீண்டும் தன் நாட்டுக்குத் திரும்ப முடிந்தது. டொமீஸியன் இரண்டாம் நீரோ என்று அழைக்கப்படும் அளவுக்கு கிறிஸ்தவர்களுக்கு எதிராக அநேக கொடுமைகளைச் செய்திருந்தான். அவனுடைய இறப்புக்குப்பின் அத்துன்பங்கள் குறையத்தொடங்கின.*

*அப்போஸ்தலர்கள் ஒருவர் பின் ஒருவராக மறையத் தொடங்கியபின் திருச்சபை முன்பிருந்த அதே தைரியத்துடன் தொடர்வதில் தளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. இவற்றை எதிர்பார்த்து அப்போஸ்தலர்கள் திருச்சபைகள் தொடர்ந்து நல்லமுறையில் வளர்ந்து வரும்படி மூப்பர்களையும் உதவியாளர்களையும் நியமித்திருந்தனர். இச்சபைத்தலைவர்களில் பலர் நல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் இருந்தபோதும் இக்காலப்பகுதியில் சபைத் தலைமைத்துவத்தின் தரம் குறைந்து காணப்பட்டது. இக்காலப்பகுதியில் சபைத்தலைவர்கள் எழுதிய நூல்கள் உலகத்து எழுத்தாளர்களின் நூல்களைவிட மேன்மையானதாக இருந்தபோதும், ஆத்மீக உணவளிப்பதில் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களுக்கு சமமான வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. அத்தோடு அப்போஸ்தலர்களின் எழுத்துக்களின் தரமும் இவற்றில் இருக்கவில்லை. இந்நூல்களை புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு சமமானதாகக் கருதமுடியாது. இவற்றில் சிலவற்றைப் பார்ப்பது நல்லது.*

**கிளெமன்டின் நிருபம்** - *அப்போஸ்தலர்களுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலத்திற்கு பிறகு எழுதப்பட்ட நிருபங்களில் காலத்தில் முதலிடம் பெறுவது கிளெமென்டின் நிருபமே. இது 96 இல் கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட நிருபம். கொரிந்துசபையில் இடம் பெற்றிருந்த சில பிரச்சனைகள் சம்பந்தமாக இக்கடிதம் எழுதப்பட்டது. இக்கடிதம் கொரிந்தியர்கள் வேத போதனையைப்பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தியது. பழைய புதிய ஏற்பாட்டு வசனங்களையும் முக்கியமாக பவுலின் நிருபங்களை உதாரணங் காட்டியும் இந்நிருபம் எழுதப்பட்டிருக்கிறது. ரோமன் க்த்தோலிக்கர் கிளெமன்ட் ரோமில் பிசப்பாக இருந்ததாக ஒரு கதையைக் கட்டி விட்டுள்ளனர். தனது சபையில் மூப்பராக இருந்ததைவிட வேறு சபைகள் மீது கிளெமன்ட் அதிகாரம் செலுத்தியதாக வரலாறு இல்லை.*

*இந்நிருபத்தை அடுத்து எழுதப்பட்ட இரண்டு முக்கிய நிருபங்களாக 132 இல் எழுதப்பட்ட பார்னபஸ்சின் நிருபமும், மேய்ப்பன் என்ற பெயரில் ஹேர்மஸ் 140 க்கும் 150 இடைப்பட்ட காலத்தில் எழுதிய நூலையும் குறிப்பிடலாம். இவை இரண்டும் வேதத்தைப் போதிப்பவையாக இல்லாமல் எல்லைமீறிய வெறும் கற்பனைகளாக உள்ளன. அப்போஸ்தலப் போதனைகளைக் கைவிட்டுவிட்டு இவை இரண்டும் மனித சிந்தனையின் எண்ணங்களை வெளிப்படுத்தும் நூல்களாக மட்டும் இருக்கின்றன.*

*இவற்றை அடுத்து வரலாற்றில் வரும் முக்கிய மனிதனாக அந்தியோகியாவின் பிசப்பாக இருந்த* **இக்னேஸியஸைக்** *குறிப்பிடலாம். 110க்கும் 117 க்கும் இடைப்பட்ட காலத்தில் ரோமில் இக்னேஸியஸ் கொல்லப்பட்டார். மரணத்தைத் தழுவ ரோம் நகரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தவேளை இக்னேஸியஸ் ஏழு நிருபங்களை வெவ்வேறு சபைகளுக்கு எழுதி-*

னார். கிறிஸ்துவின் பிறப்பையும், பரிகாரப்பலியையும் பற்றி எழுதிய இக்னேஸியஸ் அக்காலத்தில் எழுந்த போலிப்போதனையான டொஸட்டிஸத்தை (Docetism) அதிகம் தாக்கி எழுதினார். இப்போதனை கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது உண்மையான சரீரத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும், அவர் தன் வாழ்வில் அனுபவித்த துன்பங்கள் வெறும் மாயை என்றும் போதித்தது. இப்போலிப்போதனையை எதிர்ப்பதற்கு சபைத்தலைமையின் அதிகாரத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சபைத்தலைமையின் அதிகாரத்தைக் கடவுளுடைய அதிகாரமாக கருத வேண்டும் என்றும் இக்னேஸியஸ் போதித்தார். இதன் மூலம் வேதபோதனைகளைமீறிய ஒரு நிலைக்கு சபைத்தலைமையை இக்னேஸியஸ் உயர்த்தியதைப் பார்க்கிறோம்.

சபை வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே பிரஸ்பிட்டர் (Presbyter) பிசப் (Bishop) ஆகிய வார்த்தைகள் சபையின் மூப்பர்களைக்குறிக்கப்பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளாகவே இருந்துள்ளன. இதில் பிசப் என்ற வார்த்தைக்கு மூப்பர் என்றே பொருள். உண்மையில் King James Version மொழி பெயர்ப்பில் 1 தீமேத்தேயு 3:1 இல் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த ஆங்கில வார்த்தைக்கு மேற்பார்வையாளன் (Overseer) என்பதே பொருள். இதை ஆங்கிலத்தில் "பிசப்" என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஆனால், இன்று "பிசப்" என்ற வார்த்தை மிகவும் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. பிசப், மூப்பரைவிடப் பெரிய சபைத்தலைவராகக் கருதப்படுகிறார். இது வேதத்தில் காணப்படும் போதனையல்ல. வேதத்தைப் பொறுத்தளவில் பிசப்பும், மூப்பரும் ஒரே பதவிகள்.

இக்னேஸியஸின் காலத்தில் அந்தியோகியாவிலும் கிழக்கில் வேறு சில இடங்களிலும் ஒரு மூப்பர் மற்ற மூப்பர்களுக்கெல்லாம் தலைமை தாங்கி அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் முறை ஏற்பட்டுவிட்டது. வேதம் மூப்பர்களில் சிலர் முழு நேர ஊழியத்திற்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும், அவர்கள் மற்ற மூப்பர்களைவிட அதிக நேரத்தைப் பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் செலவிடுவார்கள் என்றும் போதிக்கிறதே தவிர ஏனைய மூப்பர்களைவிட இவர்கள் கூடுதல் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று போதிக்கவில்லை. வேதபோதனைகளுக்கு முரணாக ஒரு மூப்பர் "பிசப்பாக" சகல அதிகாரம் கொண்டவராக இருக்கும் முறை இக்னேசியஸ் காலத்திலேயே தோன்றிவிட்டது.

**ஸ்மர்னா சபையைச் சேர்ந்த பொலிகார்ப்** (Polycarp) - இரண்டாம் நூற்றாண்டில் பிரசித்தம் பெற்ற கிறிஸ்தவராகவும், கிறிஸ்துவுக்காக மரணத்தைத் தழுவியவர்களில் ஒருவருமாக ஸ்மர்னாவைச் சேர்ந்த பொலிகார்ப் இருந்தார். அப்போஸ்தலனான யோவானின் சீடனான பொலிகார்ப் கி. பி 156 இல் உயிரோடு எரிக்கப்பட்டபோது அவருக்கு 86 வயதாக இருந்தது. யோவான் இறந்தபோது பொலிகார்ப்பிற்கு 30 வயதாக இருந்திருக்கலாம். பொலிகார்ப்பின் சீடரான ஐரேனியஸ் (Irenaeus) , பொலிகார்ப் அடிக்கடி யோவானைப் பற்றி பேசுவார் என்று கூறுகிறார். பொலிகார்ப் கிறிஸ்துவில் உறுதியான விசுவாசமுள்ளவராகவும், நல்ல இருதயத்தைக் கொண்டவராகவும் இருந்தார். கி. பி. 155 இல் ஈஸ்டர் தினத்தைப் பற்றிக் கலந்தாலோசிக்க பொலிகார்ப் ரோமிற்குப் போனார். ரோமில் பிசப்பாக இருந்த அனிசேட்ஸோடு இதில் பொலிக்கார்ப்பிற்கு ஒத்துப் போகமுடியாவிட்டாலும் அவருடைய நண்பராக இருந்தார். இக்காலத்தில் ரோமில் இருந்த பிசப் ஏனைய இடங்களில் இருந்த சபைகள் மீது அதிகாரம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

அன்டோனியஸ் பயஸ் என்ற ரோம அதிபதியின் காலத்தில் பொலிகார்ப் உயிரோடு எரிக்கப்பட்டார். தனது எதிரிகள் மீது பொலிகார்ப் அன்பு செலுத்தியதை அவர் ஸ்மர்னா சபையில் இருந்து எழுதிய கடிதம் தெரிவிக்கிறது. பொலிகார்ப்பை எரிப்பதற்கு முன்பாக ரோமப்படைத்தளபதி அவரைப் பார்த்து, கிறிஸ்துவை நீ விசுவாசிக்கவில்லை என்று சொன்னால் உன்னை விட்டுவிடுகிறோம் என்று கூறியபோது பொலிகார்ப் அவரைப் பார்த்து, எண்பத்தியாறு வருடங்கள் அவருக்காக நான் உழைத்திருக்கிறேன். அவர் எனக்கு எந்தத்துன்பமும் செய்ததில்லை. என்னை இரட்சித்த என் தேவனை நான் எப்படி மறுதலிக்க முடியும்? என்று கேட்டார். பொலிகார்ப் மெய் விசுவாசமுள்ள ஒரு சீடனாக மரித்தார்.

**பிளினிக்கும் ரோம அதிபதி டிராஜானுக்கும் இடையில் நடந்த கடிதத் தொடர்பு** - இரண்டாம் நூற்றாண்டு சபை பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள பிளினிக்கும் டிராஜானுக்கும் இடையில் நடந்த கடிதத் தொடர்பு உதவுகிறது. கி. பி 111 இல் பித்தினியாவின் கவர்னாராக பிளினி பொறுப்பேற்றபோது அங்கே கிறிஸ்தவர்கள் பெரும் வளர்ச்சி அடைந்து வேற்று மதக்கோவில்களே இல்லாமல் போயிருப்பதைக் கண்டார். கிறிஸ்தவத்தைப் பற்றி அதிகம் தெரிந்திராத பிளினிக்கு கிறிஸ்தவத்தின் வளர்ச்சி அதிக சங்கடத்தை அளித்தது. கிறிஸ்தவர்கள் மூட நம்பிக்கையுள்ளவர்கள் என்று பிளினி எண்ணினார். கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்தார். இருந்தபோதும் கிறிஸதவர்களின் நடவடிக்கைகள் அவரை வியப்படையச் செய்தது. கிறிஸ்தவர்கள் அதிகாலையில் எழுந்து கீர்த்தனைகளைப் பாடி, கிறிஸ்தவுக்கு முன் தாம் திருடமாட்டோம், விசுவாசத்திற்கு எதிராக நடக்க மாட்டோம், விபச்சாரத்தில் ஈடுபடமாட்டோம் என்றெல்லாம் உடன்படிக்கை செய்வதைக் கண்டார் பிளினி. ஒழுக்கம் மிகவும் சீரழிந்து காணப்பட்ட ரோம ராஜ்யத்தில் இத்தகைய உயர்ந்த ஒழுக்க நடவடிக்கைகள் பிளினிக்கு பிரமிபேற்படுத்தியதில் வியப்பில்லை. இந்தக்கிறிஸ்தவர்களை என்ன செய்வது? என்று பிளினி டிராஜானுடன் கலந்தாலோசித்தார். இதுபற்றி டிராஜானுக்கு பிளினி எழுதிய கடிதத்தில் தமது நடவடிக்கைகளைப் பற்றி விபரித்திருந்தார். முதலில் தான் அவர்களைப் பார்த்து நீங்கள் கிறிஸ்தவர்களா? என்று கேட்பது வழக்கம் என்றும், அதற்கு அவர்கள் ஆம்! என்று பதிலளித்தால் இரண்டு மூன்று முறை மீண்டும் அதே கேள்வியை வற்புறுத்திக் கேட்பதோடு அவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டிவரும் என்றும் பயமுறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன் என்றும் பிளினி எழுதினார்.

இதற்குப் பதிலாக டிராஜான், பிளினியின் முறைகளை ஆதரித்து எழுதியதோடு, கிறிஸ்தவர்கள் மீது கொண்டுவரப்படும் அநாவசியமான குற்றச்சாட்டுகளைக் கண்டு கொள்ள வேண்டாம் என்றும் பதில் எழுதினார். அத்தோடு வேண்டுமென்றே கிறிஸ்தவர்களைத் தண்டிக்க முயற்சிக்க வேண்டாம் என்றும், அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்-

பட்டாலொழிய அவர்களைத் தண்டிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்து வேற்றுக் கடவுளரை ஆராதிக்க முன்வந்தால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எழுதினார்.

டீராஜான் பிளினிக்கு எழுதிய இந்தப் பதிலால் கிறிஸ்தவர்களுக்கு பெரும் நன்மையொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கிறிஸ்தவர்களை இது ஓரளவுக்கு உயர்த்தி அவர்கள்மேல் தேவையற்ற குற்றஞ்சாட்டும் வழக்கத்தைப் பெருமளவில் குறைத்தது.

இக்காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத்தை ஆதரித்து எழுதப்பட்ட ஆக்கங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் எதிர்த்தும், பழித்தும் அநேகர் பேசியும், குற்றஞ்சாட்டியும், எழுதியும் வந்ததால் கிறிஸ்தவம் என்றால் என்ன? என்று விளக்கி எழுதப்பட்ட நூல்கள் இக்காலத்தில் தோன்றின. இவற்றை அப்போலஜிஸ்ட் (Apologists) என்று அழைப்பர். இக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிட்டுக் கூறக்கூடிய அப்போலஜிஸ்டாக **ஜஸ்டின் மார்டர்** (Justin Martyr) இருந்தார். இவர் சிறந்த கிறிஸ்தவராகவும், படிப்பதில் அதிக ஆர்வமுள்ளவராகவும் இருந்தார். இவர் பாலஸ்தீனத்தில் சிக்கம் என்ற இடத்தில் **கி. பி 100** இல் பிறந்து பின்பு ரோமப் பேரரசனான மார்கஸ் அவுரேலியஸின் ஆட்சிக் காலத்தில் ரோமில் **கி. பி. 163** இல் கொல்லப்பட்டார். கிறிஸ்தவ விசுவாசத்தை விளக்கியும் ஆதரித்தும் இவர் தனது முதலாவது ஆக்கத்தை ரோம பேரரசனான அன்டோனியஸ் பயஸுக்கும், செனட்டுக்கும் ரோமாபுரி மக்களுக்கும் அனுப்பினார். இரணடாவதாக இவர் எழுதிய ஆக்கம் முதலாவதைவிட சுருக்கமானதாகவும் செனட்டுக்கு மட்டும் எழுதப்பட்டதாக இருந்தது. இவருடைய நீண்ட ஆக்கமாக, டீரைப்போ என்ற யூதனுடனான கலந்துரையாடல் (Dialogue with Trypho the Jew) என்ற நூல் இருந்தது. இது கிறிஸ்தவ விசுவாசத்தை யூதர்களுக்கு விளக்கி ஆதரித்து எழுதப்பட்டதாக இருந்தது.

ஜஸ்டின் மார்டர் வேற்று தெய்வங்களை வணங்கிய மனிதனாகப் பிறந்து கடவுளை நாடி அலைந்தவராக இருந்தார். தத்துவத்தில் ஆர்வம் கொண்டு அதையும் படித்தார். ரோம், அதென்ஸ், அலெக்சாண்டிரியா போன்ற இடங்களுக்கெல்லாம் பிரயாணம் செய்தார் எபேசுவில் கடற்கரையோரம் ஒருநாள் நடந்து போய்க்கொண்டிருந்தபோது ஒரு வயதான மனிதன் கிறிஸ்துவைப் பற்றியும் விசுவாசத்தைப்பற்றியும் ஜஸ்டினுக்கு விளக்கி கர்த்தரிடம் வழி நடத்தினார். அன்றே ஜஸ்டின் கிறிஸ்துவை அறிந்து கொண்டார்.

கிறிஸ்தவத்தை ஆதரித்து எழுதிய தன்னுடைய முதலாவது நூலில் ஜஸ்டின், கிறிஸ்தவத்திற்கு எதிரான தவறான குற்றச்சாட்டுகளை நிராகரித்து எழுதினார். கிறிஸ்தவர்களுடைய ஞாயிறு ஆராதனை முறையையும் இதில் விளக்கியிருந்தார் ஜஸ்டின். ஞாயிறு தினத்தில் கூடிக் கீர்த்தனைகள் பாடுவதும், ஜெபிப்பதும், பிரசங்கம் செய்வதும், அதைக் கேட்பதும், அப்பம் பிட்குதலுமே அன்று கிறிஸ்தவ ஆராதனை முறையாக இருந்ததை ஜஸ்டினின் நூலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இன்று ஆராதனை என்ற பெயரில் அநேகர் செய்து வரும் அட்டகாசங்களுக்கு இரண்டாம் நூற்றாண்டு சபைகளில் இடமிருக்கவில்லை.

**கி, பி 163** இல் ஜஸ்டினும் அவரோடு சேர்ந்த வேறு சிலரும் கொல்லப்படுவதற்கு முன், "இறந்தபின் நீங்கள் எல்லோரும் உயிர்த்தெழப் போகிறோம் என்று நினைக்கிறீர்களா?" என்று அவர்களைப் பார்த்து அவர்களுக்கு கொலைத் தண்டனை விதித்தவர்கள் கேட்டார்கள். அதற்கு ஜஸ்டின் அமைதியாக, "அதை நான் நிச்சயமாக அறிந்திருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

ரோமப் பேரரசனான மார்க்கஸ் அவுரேலியஸின் காலத்தில் பல வருடங்களுக்கு கிறிஸ்தவர்கள் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். யுசீபியஸ் (Eusebius) என்ற வரலாற்றாசிரியர் தனது நூலில் கிறிஸ்தவர்களுக்கு அக்காலத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகள் பலவற்றை வர்ணித்து எழுதியுள்ளார். **கி. பி. 177** இல் தற்போதைய ஐரோப்பாவில் கோல் (Gaul) என்ற பிரதேசத்தில் பல கொடுமைகள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்தன. ரோன் பள்ளதாதாக்கில் இருந்த கிறிஸ்தவ சபையொன்று அநேக கொடுமைகளைச் சந்தித்தது. அச்சபையின் தலைவராக இருந்த 90 வயதான பொன்தியஸ் கொல்லப்பட்டார். கிறிஸ்தவர்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாத அநேக துன்பங்களை இக்காலங்களில் சந்தித்தனர்.

இரண்டாம் நூற்றாண்டில் முதல் நூற்றாண்டைப் போலவே அநேக துன்பங்களைக் கிறிஸ்தவ சபை அனுபவித்தபோதும் கிறிஸ்தவம் தொடர்ந்து வளர்ந்தது. ரோமப் பேரரசு வியக்கும் வகையில் கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதியானதாக இருந்தது. கிறிஸ்தவர்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் கிறிஸ்தவர்களுடைய உறுதியான விசுவாசம் அவர்களைத் திகைக்க வைத்தத்தோடு, ஆத்திரத்தையும் கிளப்பியது. கிறிஸ்தவர்களைக் கர்த்தரை அறியாதவர்கள் துன்புறுத்துவது சகஜமே. சத்தியத்தை சத்தியத்திற்கு எதிரானவர்கள் எப்போதுமே விரும்பமாட்டார்கள்.

இந்நூற்றாண்டில் கிறிஸ்தவம் அதிக வளர்ச்சி அடைந்த போதும், போலிப்போதனைகளும் கண்மூடித் தனமாக வளரத்தொடங்கின. பிற்காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபையின் "போப்" உருவாவதற்கு இக்காலத்திலேயே வித்திடப்பட்டுவிட்டதையும் நாம் ஏற்கனவே பார்த்தோம். அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைத்தலைமைமுறையில் மாறுதல் ஏற்பட்டு மனித சிந்தனைக்கு இடமளிக்கப்பட்டது. முக்கியமாக இக்காலத்தில் அப்போஸ்தலர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களுக்கு இணையாகக்கூறக்கூடிய தலைவர்கள் திருச்சபையை வழி நடத்த இல்லாமல் போனதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சபைத் தலைமை விசுவாசத்திலும், பக்தியிலும் சிறந்தாக இல்லாமல் போனால் திருச்சபையில் சீரழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்பதை இரண்டாம் நூற்றாண்டு விளக்குகிறது.

இக்காலத்தில் எழுந்த அநேக போலிப்போதனைகளை அடுத்த இதழில் விளக்கமாகப்பார்ப்போம். அவற்றில் குறிப்பிடத் தகுந்தவைகள், நாசரீன்ஸ் (Nazarenes), எபியனைட்ஸ் (Ebionites), நொஸ்டிஸிசம் (Gnosticism), மொன்டனிசம் (Montanism) ஆகியவைகளாகும். இவற்றின் பாதிப்பால் இரண்டாம் நூற்றாணடில் திருச்சபை மிகவும் தளர்ந்து காணப்பட்டது. வேதத்தைப் படிப்பதையும், ஆராய்வதையும் விட்டுவிட்டு, கண்மூடித்தனமான விளக்கங்களைக் கொடுப்பதையும், புதிய புதிய போதனைகளை நாடுவதையும் வாழ்க்கையாகக் கொண்டால் இக்கதியே எச்சபைக்கும் ஏற்படும் என்பதை இக்காலம் எச்சரித்து உணர்த்துகிறது.

**(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

வின் இரட்சிப்பு கர்த்தரில் தங்கியிருக்காமல் மனிதனி-லேயே தங்கியிருக்கிறான். அது மட்டுமல்லாமல், இரட்சிப்பு அடைந்த ஒருவன் அதை இழக்கவும் முடியும் என்று அவன் நம்புவதால் அவனுடைய சுவிசேஷப்பணி உறுதியானதோ, நிச்சயமானதோ அல்ல. அதனால் ஆர்மீனிய சுவிசேஷத்தால் எவரும் நிச்சயமான இரட்சிப்பை அடையவும் முடியாது. இரட்சிப்பின் நிச்சயத்துடன் வாழவும் முடியாது.

கல்வினிசப் போதனைகளை நம்புகிறவர்கள் சுவிசே-ஷம் சொல்வதில்லை, என்று சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு வீணான கட்டுக்கதை. கல்வினிச விசுவாசிகள் சுவிசேஷம் சொல்கிறோம் என்ற பெயரில் சுகமளிப்புக் கூட்டங்களையும், அர்ப்பண அழைப்புக் கூட்டங்களையும் நடத்துவதில்லைதான். ஆனால், கல்வினிசப் போதனைகள் சுவிசேஷம் சொல்வதையும், சபைகள் அமைப்பதையும் பெரிதும் வலியுறுத்துகின்றன. கல்வினிசப் போதனையை விசுவாசித்தவர்களே உலகின் பெரும் சுவிசேஷக ஊழியர்களாகவும், திருச்சபைகளை ஏற்படுத்தியவர்களா-கவும் இருந்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு வந்து சுவிசேஷப்பணி செய்த வில்லியம் கேரி கல்வினிசப் போதனையை விசுவாசித்தவர். அன்று இந்தியாவின் ஒருபகுதியாக இருந்த இன்றைய பங்ளாதேசத்திற்கு வந்து ஊழியம் செய்த ஹென்றி மார்டின் கல்வினிசப் போதனைகளை விசுவாசித்தவர். வேல்ஸ் தேசத்தின் ஜோர்ஜ் விட்பீல்ட் உலகின் தலைசிறந்த கல்வினிச சுவிசேஷப் பிரசங்கி. அமெரிக்காவின் ஜொனத்தன் எட்வர்ட்ஸ் இன்னுமொரு பெரும் சுவிசேஷப் பிரசங்கி. அமெரிக்க இந்தியர்கள் மத்தியில் ஊழியம் செய்த டேவிட் பிரெய்னாட், பர்மாவுக்குப்போன அதோனி-ராம் ஜட்சன், இங்கிலாந்தை, ஏன்! முழு உலகத்தையே தனது பிரசங்கத்தால் அதிரச் செய்த சார்ள்ஸ் ஸ்பர்ஜன், வேல்ஸின் ஹொவல் ஹெரிஸ், டேனியல் ரோலன்ட்ஸ் என்று இப்பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். இவர்கள் எல்லாம் கல்வினிசப் போதனைகளைக் கற்றறிந்து சுவிசேஷப்பணியில் ஈடுபட்டவர்கள். இவர்கள் சுவிசேஷம் சொல்லுவதை நம்பியிராவிட்டால் இப்பணியில் எப்படி ஈடுபட்டிருக்க முடியும்? எனவே கலவினிசப் போதனைகளை அறிந்தவர்களே வேதபூர்வ-மாக கர்த்தரின் மகிமைக்காக சுவிசேஷத்தைச் சொல்லி சபை அமைக்க முடியும்.

கல்வினிச ஐங்கோட்பாடுகளை சந்தேகமில்லாமல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இன்று கற்றறிந்திருக்க வேண்-டும். கல்வினிச ஐங்கோட்பாடுகள் போலித்தனமான சுவிசேஷத்தைத் தோலுரித்துக் காட்டி, வேதம் போதிக்-கும் மெய்ச்சுவிசேஷத்தைத் தெளிவாக விளக்குகிறது. போலிச்சுவிசேஷத்தின் மாயையில் சிக்கி போலிக்-கிறிஸ்தவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவ சபைகள் அழிந்து போய்விடாமல் தம்மைக் காத்துக் கொள்ள இன்று விசுவாசிக்க வேண்டிய சத்தியங்கள் கல்வினின் ஐங்கோட்பாடுகள். இன்றைய கெரிஸ்மெட்டிக், பெந்தகொஸ்தே மாயையிலிருந்து விடுபட்டு, தாராளவாத, சமயசமரசப் போக்கில் இருந்து தப்பி வேதபூர்வமான சபைகளாக தமிழ் கிறிஸ்தவ சபைகள் பணிசெய்ய கல்வினிச ஐங்கோட்-பாடுகளை அறிந்திருப்பது இன்று அவசியம்.

பெலேஜிய, ஆர்மீனிய போலிச்சுவிஷேசத்தை அத்தி-பாரமாக வைத்து எழுப்பப்படுகின்ற சபைகளும், ஊழியங்களும் அக்கினியினாலே பரிசோதிக்கப்படப்-போகும் நாள் வருகிறது என்று வேதம் சொல்கிறது. அத்தகைய ஊழியங்களை செய்கிறவர்கள் அக்கினி-யினாலே வெளிப்படுத்தப்படுகிற நாள் சமீபிக்கிறது. இத்தகைய ஊழியங்கள் வெந்து போகப் போகிற அவலத்தையும் வேதம் முன்கூட்டியே எச்சரிக்கிறது (1 கொரிந்தியர் 3:11-14). போலிச்சுவிஷேசத்தை அடியோடு புறக்கணித்து வேதம் போதிக்கும் சுவிஷேசத்தை பிரசங்கித்து கர்த்தரின் சபையைக்கட்ட நாம் முற்படு-வோம். தமிழ் கிறிஸ்தவர்கள் அத்தகைய சபைகளோடு தம்மை இணைத்துக் கொண்டு மெய்ச்சுவிஷேச ஊழி-யங்கள் தொடர இன்று ஊக்கத்துடன் ஊழைக்க வேண்டியது அவசியமாகிறது.

குறிப்புகள்:

1. George Smeaton, The Doctrine of the Holy Spirit, pp.300, 301. செமி-பெலேஜியனிசம் ஆரஞ்சு (Orange) குழுவின-ரால் 529 ல் நிராகரிக்கப்பட்டது. ஆர்மீனியனிசம் அதற்குப்பின் ஆயிரத்தி நூறுவருடங்களுக்குப்பிறகு டோர்ட் குழுவினரால் நிராகரிக்கப்பட்டது.

**(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பாஷையில் பேசுவதனால் ஏற்படும் குழப்பத்தைச் சுட்டிக் காட்டுகிறார். சபையாகக்கூடி வந்து ஒருவரும் புரிந்துகொள்ள முடியாத பாஷைகளில் பேசினால் உள்ளே வரும் அவிசுவாசிகள் நம்மைப் பயித்தியக்-காரர்கள் என்றுதான் நினைப்பார்கள். பெந்தகொஸ்தே நாளிலும் அநேக அவிசுவாசிகள் அந்நியபாஷை பேசிய-வர்களை குடிகாரர்கள் என்றுதான் கேளி செய்துள்ளார்-கள். அதற்கு ஏன் சபை இடம் கொடுக்க வேண்டும்? சபையில் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழி-யில் சத்தியம் போதிக்கப்பட்டால் விசுவாசிகளும், அவிசுவாசிகளும் பயனடைவார்கள். அவிசுவாசி சததியத்தைக் கேட்டு தன் இருதயத்தில் உணர்த்தப்பட்டு கர்த்தரை ஆராதிக்கும் நிலை ஏற்படும். கர்த்தர் சபை-யார் மத்தியில் இருக்கிறார் என்று அவிசுவாசிகள் உணரும் நிலை ஏற்படும். இதற்கெல்லாம் தடையாக அந்நியபாஷை பேசுதல் அமைந்துவிடும்.

இன்று அந்நியபாஷையோ அல்லது தீர்க்கதரிசனங்-களோ இல்லை என்பதை நாம் 13 ஆம் அதிகாரத்தைப் படிக்கும்போது தெளிவாகப் பார்த்தோம். அவிசுவாசி-கள் சுவிஷேசத்தைக் கேட்டு கர்த்தரை அறிந்துகொள்ள தேவன் நமக்கு வேதத்தை மட்டுமே தந்துள்ளார். வேத-வசனங்களை பிரசங்கிப்ப- தாலும், போதிப்பதாலும் மட்டுமே இன்று சபை இயேசு கிறிஸ்துவின் சுவிஷே-சத்தை அறிவிக்க முடியும். அதைச் செய்யும்படியே கர்த்தர் சபைக்குக் கட்டளையிட்டுள்ளார். அந்நிய-பாஷை பேசுவதிலும், தீர்க்கதரிசனம் சொல்லுவதிலும் காலத்தைச் செலுத்துபவர்கள் வேதத்தைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாமல் இன்னும் முதலாம் நூற்றாண்டிலேயே வாழந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆத்துமாக்கள் தவறான போதனைகளுக்கு இடம் கொடுத்து மோசம் போய்விடாமல் வேதத்தில் மட்டும் கவனம் செலுத்திப் படிக்க வேண்டியது அவசியம். தமிழ் கிறிஸ்தவ சமுதாயத்தை மோசம் செய்து அழித்துக் கொண்டிருக்கிற பெந்தகொஸ்தே, கெரிஸ்-மெட்டிக் மாயங்களில் இருந்து விடுபட்டு மறுபடியும் வேதம் என்ற சீர்திருத்தவாதகால வைராக்கியம் நம் காலத்தில் நம்மக்கள் மத்தியில் ஏற்பட கர்த்தர் கிருபை செய்யட்டும். (வளரும்)

# கடவுளின் ஆணை

**1689 விசுவாச அறிக்கை – அதிகாரம் 3 : பாகம் 3**
**விளக்கம்: லமார் மார்டின் (Lamar Martin)**
**தமிழில்: ஆசிரியர்**

*பாரா **1:** கடவுள் தனது பேரறிவும், பரிசுத்தமும் கொண்ட சுயசித்தத்தின் ஆலோசனையினால் இனி நிகழப்போகிற அனைத்துக் காரியங்களையும் சுதந்திரமாகவும், மாறாத்தன்மையுடனும் நித்தியத்திலிருந்து தாமே தமக்குள்ளாகத் தீர்மானித்திருக்கிறார். (அதாவது எவற்றாலுமே உந்தப்படாது அவர் தன் திட்டங்களை செயற்படுத்துவது மட்டுமின்றி அணுவளவும் மாற்றமின்றி அவரது நோக்கங்கள் அனைத்துமே நிறைவேற்றப்படுகின்றன). அதேவேளை, அவர் பாவத்தின் காரணகர்த்தரோ அல்லது அதைச் செய்வதில் எவருடனும் எந்தக்கூட்டும் உள்ளவரோ (அதற்குப் பொறுப்பானவரோ) அல்ல. அவரது ஆணையின் காரணமாக படைப்புயிர்களின் சித்தத்திற்கு ஊறேற்படாமலும், துணை பொருட்கள் அல்லது இடைக்காரணங்களின் சுதந்திரமான செயற்பாடுகள் நீக்கப்படாமலும் (துணைக்காரணங்கள் இடையூறாக வராமல்), அனைத்துமே அவரால் நிலைநிறுத்தப்படுகின்றன. இவை எல்லாவற்றிலும், அனைத்தின்மீதும் ஆணை செலுத்தி அமைவுறச்செய்யும் கடவுளுடைய ஞானமும், தனது ஆணையை நிறைவேற்றும் அவரது வல்லமையும், நேர்மையும் வெளிப்படுகின்றது. (கடவுளின் நேர்மை என்பது தன் பரிசுத்த குணாதிசயங்களுக்கும் வார்த்தைக்கும் ஏற்றபடி நடக்கும் அவரது நிலை தடுமாறாத்தன்மையைக் குறிக்கும்).*

*(ஏசாயா 46:10; எபேசியர் 1:11; எபிரேயர் 6:17; ரோமர் 9:15, 18; யாக்கோபு 1:13-15; யோவான் 1:5; அப்போஸ்தலர். 4:27-28; யோவான் 19:11; எண்ணாகமம் 23:19; எபேசியர் 1:3-5.)*

*பாரா **2:** அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிகழக்கூடிய அனைத்தையும் கடவுள் அறிந்திருந்தபோதும், எதிர்காலத்தில் அவற்றை அவர் முன்னறிந்திருந்ததனாலோ அல்லது சில சூழ்நிலைகளின் கீழ் அவை எவ்வகையிலாவது நடைபெறும் என்பதாலோ அவர் எதையும் ஆணையிடவில்லை.*

*(அப்போஸ்தலர் 15:18:6; ரோமர் 9:11-18)*

இவ்வருடத்தில் வெளிவந்த முதலிரண்டு இதழ்களில் கடவுளின் ஆணைபற்றிய இவ்வதிகாரத்தின் முதல் இரண்டு பாராக்களுக்கான விளக்கங்களைப் பார்த்தோம். இவ்விரண்டு பாராக்களும் கடவுளின் ஆணையைப் பற்றிய பொதுவான விளக்கத்தைத் தந்தன. அவ்விதழ்களை வாசகர்கள் மறுபடியும் வாசிப்பது நல்லது. இவ்விரு பாராக்களும் கடவுள் நிகழப்போகிற அனைத்தையும் உலகத்தோற்றத்திற்கு முன்பே ஆணையிட்டிருப்பதாகவும், அவ்வாணை ஒருபோதும் மாறாது என்றும் விளக்கின. அத்தோடு, கடவுள் ஆணையிட்டபோது தனது படைப்புயிர்கள் சித்தப்படி செய்யும் செயல்களை மீறாமல் இருந்ததோடு, பாவத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாதவராகவும் இருந்தார். பாரா இரண்டு, கடவுளுக்கு நடக்கப்போகிற அனைத்தும் தெரிந்திருந்த போதும் அவரது ஆணை எந்தவிதமான படைப்புயிர்களின் கிரியைகளின் அடிப்படையிலும் இடப்படவில்லை என்று விளக்கியது. இவையே முதலிரண்டு பாராக்கள் கடவுளின் ஆணை பற்றித் தரும் விளக்கங்கள்.

இவ்வதிகாரத்தின் ஏனைய பாராக்களான **3-7** எதைப்போதிக்கின்றன என்று இனிப்பார்ப்போம். 3 லிருந்து -6 வரையிலான பாராக்கள் கடவுளுடைய நித்திய ஜீவனுக்காகவும், நித்திய தண்டனைக்காகவும் முன்குறிக்கப்பட்டவர்களைப்பற்றி விளக்குகின்றன. இவற்றில் 3-5 வரையிலான பாராக்கள் கடவுள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும்படியான நியதியை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை விளக்குகின்றன. பாரா 6 அத்தகைய முடிவைக் கொண்டுவரும் சாதனங்களையும் கடவுளே ஏற்படுத்தியிருக்கிறார் என்று கூறுகின்றது. இவ்வதிகாரத்தின் கடைசிப் பகுதியான பாரா 7 இப்பகுதிகள் போதிக்கும் சத்தியங்களை நாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும்? என்ற வினாவுக்கு விடையளிக்கின்றது.

முதலாவதாக பாரா 3 ஐ ஆராய்வோம்.

*பாரா **3:** கடவுளின் ஆணையின் மூலமாக அவரது மகிமை வெளிப்படும்படியாகவும், அவரது மேன்மை பொருந்திய கிருபை வெளிப்பட்டு துதி பெறவும், சில மனிதர்களும் தேவதூதர்களும் இயேசு கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனை அடையும்படி முன்குறிக்கப்பட்டுள்ளார்கள். ஏனையோர், அவரது மேன்மையான நீதி வெளிப்பட்டு துதிபெறும்படியாக, தங்கள் பாவத்தில் தொடர்ந்திருந்து நியாயமான கண்டனத்தைப் பெறும்படியாக விடப்பட்டுள்ளார்கள்.*

*1 தீமோத்தேயு 5:21; மத்தேயு 25:34; எபேசியர் 1:5-6;*

இம் 3 வது பாரா கடவுள் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே சிலரை நித்திய ஜீவனுக்காகவும், சிலரை நித்திய தண்டனைக்காகவும் நியமித்திருக்கிறார் என்ற வேத போதனையை சுட்டிக்காட்டுகிறது. முதல் இரண்டு பாராக்களும் உலகத்தோற்றத்திற்கு முன் நிகழப்போகின்ற அனைத்தையும் கடவுள் ஆணையிட்டிருக்கின்றார் என்று விளக்கின. மனிதனதும், தேவதூதர்களின் முடிவும் அநாதி காலத்திலிருந்தே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. கடவுளின் எல்லாவற்றையும் உள்ளடக்கிய இவ்வாணையின்படி சிலர் நித்திய ஜீவனுக்காக முன்குறிக்கப்பட்டும், சிலர் நித்திய தண்டனைக்காக முன்குறிக்கப்பட்டும் இருக்கிறார்கள். இறையியல் வல்லுனர்கள் இதை நித்திய ஜீவனுக்காக முன்குறித்தலும், நித்திய தண்டனைக்கான முன்குறித்தலும் என்று அழைக்கிறார்கள்.

இப்பாராவில் விசுவாச அறிக்கை வேதம் போதிக்கும் உண்மையைத்தான் விளக்குகிறது. மேலெழுந்த வாரியாக இதைப்பார்க்கும்போது கடவுள் கருணையற்றவர் அவர் எப்படி சிலரை நித்திய தண்டைனைக்கு நியமிக்க முடியும் என்றெல்லாம் ஆவேசமாக கேள்வி கேட்க நமது கேடான இருதயம் தூண்டும். ஆனால், வேதம் போதிக்கும் இந்த உண்மையை பரிசுத்த ஆவியின்

துணையோடு பொறுமையாகப் படித்துப் புரிந்து கொள்வது நல்லது. 11 தீமோத்தேயு 5:21 ல் பவுல், "நீ இவைகளைக் காத்து நடக்கும்படி . . . தெரிந்து கொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக . . " என்று தீமோத்தேயுவைப்பார்த்து சொல்வதாக வாசிக்கிறோம். இங்கே பவுல் குறிப்பிடுவது, கடவுளால் முன்குறிக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்களையே. யூதா 6 ல் "தங்களுடைய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும்" என்று வாசிக்கிறோம். இது கடவுளுக்கு எதிராக நடந்து அவருடைய பிரசன்னத்தில் இருந்து நீக்கப்பட்ட தூதர்களைக் குறிக்கிறது. சில தூதர்கள் கடவுளுக்கு எதிராக நடந்தபோது, மற்றவர்கள் கடவுளுக்கு விசுவாசமாக பணி செய்ததற்குக் காரணமென்ன? கடவுளின் முன்குறித்தலே இதற்குக் காரணம் என்று பவுல் கூறுகிறார். மொத்தத் தூதர்களில் சிலர் கடவுளுக்கு எதிராக நடக்கும்படியும், மற்றவர்கள் அவருக்கு சேவை செய்யும்படியும் கடவுள் அநாதிகாலத்திற்கு முன்பே முன்குறித்திருக்கிறார்.

எபேசியர் 1:4-6 வரையிலான வசனங்களைப் பார்ப்போம். இங்கே கிறிஸ்தவர்களை முதலாம் வசனத்தில் பவுல் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கிறார். பரிசுத்தவான்கள் என்றால் "பிரித்து வைக்கப்பட்டவர்கள்" என்பது பொருள். 4 ம் வசனத்தில், அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார் என்றிருப்பதைக் காண்கிறோம். இவர்களே முதலாம் வசனத்தின்படி பிரித்துவைக்கப்பட்ட பரிசுத்தவான்கள். 4ம் வசனத்தில் நாம் காண்கிற "தெரிந்து கொண்டார்" என்ற வார்த்தையே 1 தீமோத்தேயு 5:21 லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கே அது கடவுளின் தூதர்களைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபேசியர் 1 ல் அது கிறிஸ்தவர்களைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தை கிரேக்க மொழியில் Eklego என்றிருக்கிறது. இதற்கு "ஒரு பெருங்கூட்டத்தில் இருந்து தெரிவு செய்தல்" என்று பொருள். யோவான் 13:18 ல் கிறிஸ்து இதே வார்த்தையைப் பயன்படுத்தி, "உங்களெல்லோரையும் குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேத வாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன்குதிகாலைத் தூக்கினான்" என்றார். இவ்வசனத்தில் இயேசு, அவரைச் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் தெரிந்து கொள்ளப்படவில்லை என்றும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தான் அறிவேன் என்றும், அவர்களில் ஒருவனாக தன்னைக்காட்டிக் கொடுக்கப்போகும் யூதாஸ் இல்லை என்பதையும் தெளிவாகச் சொல்கிறார். இயேசு பயன்படுத்திய அதே வார்த்தையையே பவுல் எபேசியர் 1 ல் பலமுறை விசுவாசிகளைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார். பவுல் இப்பரிசுத்தவான்களே, இத்தெரிந்து கொள்ளப்பட்டவர்களே விசுவாசிகள் என்று கூறுகிறார். அவர்கள் இப்போது கடவுளின் சுவிகாரப்புத்திரர்களாயிருக்கிறார்கள் என்றும், அதற்குக் காரணம் அவர்கள் உலகத்தோற்றத்திற்கு முன்பே கடவுளால் முன்குறிக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டிருப்பதுதான் என்றும் பவுல் சொல்கிறார். இதையே கடவுளின் ஆணைபற்றிய இவ்வதிகாரத்தின் 3ம் பாரா விளக்குகிறது - "*சில மனிதர்களும் தேவதூதர்களும் இயேசு கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனை அடையும்படி முன்குறிக்கப்பட்டுள்ளார்கள். ஏனையோர், . . . தங்கள் பாவத்தில் தொடர்ந்திருந்து நியாயமான கண்டனத்தைப் பெறும்படியாக விடப்பட்டுள்ளார்கள்.*"

நித்திய ஜீவனுக்காக சிலர் தெரிந்து கொள்ளப்பட்டிருப்பது போலவே நித்திய கண்டனத்துக்காகவும் சிலர் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளார்கள் என்று வேதம் போதிக்கிறது. ரோமர் 9 வது அதிகாரத்தில் 22 வது வசனத்தில் இருந்து வாசித்துப் பாருங்கள். பவுல் இங்கே சில மனிதர்கள் நித்திய ஜீவனை அடையப் போவதாகவும், வேறு சிலர் கண்டனத்தை அடையப் போவதாகவும் சொல்கிறார். வசனம் 22, 23 - "தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும், தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின், ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப்பாத்திரங்கள் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன?" என்றிருப்பதாக வாசிக்கிறோம். இவ்வசனத்தின் மூலம் இரண்டு விதமான பிரிவுகள் மனிதர்கள் மத்தியில் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம் கடவுளின் ஆணையே. கடவுளின் ஆணையின் காரணமாக இவ்விருபிரிவுகளும் காணப்படுகின்றன - அவருடைய மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்களும், அழிவுக்கும் எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப்பாத்திரங்களுமே அவ்விரு பிரிவுகளும். வசனம் 21, இதைச் செய்வதற்கு கடவுளுக்கு அதிகாரம் இல்லையா? என்று கேட்கிறது. தெய்வீகக் குயவனாகிய தேவன் தனது கிருபையைச் சந்திக்கவும், கோபத்தைச் சந்திக்கவுமாக இருபிரிவுகளை ஆணையிட்டு நியமித்துள்ளார். இதையே யூதாவும் 4 ம் வசனத்தில், "அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கின்றது" என்று விளக்குகிறார்.

ஏன் கடவுள் இதைச் செய்தார் என்று 3ம் பாரா விளக்குவதை இனிப்பார்ப்போம். இதற்கான காரணத்தை விளக்கும் இப்பகுதி, "*தனது மகிமை வெளிப்படும்படியாகவும், தனது மேன்மை பொருந்திய கிருபை வெளிப்பட்டு துதி பெறவும்,*" கடவுள் இதைச் செய்தார் என்கிறது. அதாவது, தனது மகிமையை வெளிப்படுத்தும்படியாக கடவுள் இதைச் செய்துள்ளார் என்கிறது விசுவாச அறிக்கை. தன்னுடைய கிருபையின் மகிமையை வெளிப்டுத்தும்படியாக சிலரை நித்திய ஜீவனுக்காக முன்குறித்தும், தனது மகிமையுள்ள நீதியை வெளிப்படுத்தும்படியாக சிலரை பாவத்தில் தொடர்ந்திருந்து நித்திய ஆக்கினையை அடையும்படி முன்குறித்தும் கர்த்தர் ஆணையிட்டுள்ளார்.

எந்தவித தகுதியும் இல்லாத மனிதரைக் கடவுள் தனது கிருபையால் தெரிந்துகொண்டு அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார். தேவகோபத்தை சந்திக்க வேண்டிய மனிதர்களை அவர் முன்குறித்திருக்கிறார். இதன் மூலம் உலகம் அவருடைய கிருபையின் மகிமையை அறிந்துகொள்ள முடிகிறது. அதேநேரம், கடவுள் நீதியுள்ளவராயிருக்கிறார். தங்களுடைய பாவத்தில் தொடர்ந்திருக்கும் மனிதர்கள் மீது தன்னுடைய கடுங்கோபத்தை நீதியாக அவர் வெளிப்படுத்தும்போது உலகம் கடவுளுடைய மகிமையுள்ள நீதியை அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றின் மூலம் தேவனுடைய பாரபட்சமற்ற குணாதிசயங்களை நாம் அறிந்து கொள்கிறோம். அவர் நீதியுள்ளவராயிருப்பதால் அவரது செயல்களில் எந்தவித பாரபட்சத்திற்கும் இடமில்லை. ஆகவே, தேவனுடைய ஆணை நீதியானது. வேதத்தில் காணப்படும் பின்வரும் வசனங்களை வாசித்துப் பாருங்கள். சங்கீதம் 106:8; நீதிமொழிகள் 16:4. இவை வேதமும் விசுவாச அறிக்கையும் போதிக்கும் நாம் இதுவரை பார்த்த உண்மைகளை மேலும் வலியுறுத்துகின்றன.

கடவுள் அனைத்தையும் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே ஆணையிட்டுள்ளார் என்றும், அனைத்தினதும் முடிவையும் முன்கூட்டியே நியமித்திருக்கிறார் என்றும், அவற்றை அவர் தனது மகிமையின் பொருட்டே அவர் செய்திருக்கிறார் என்றும் இதுவரை பார்த்தோம். இனி அவை எந்தவித மாற்றமுமில்லாமல் நிச்சயமாக நிகழும் என்ற உண்மையை போதிக்கும் 4 ம் பாராவைக் கவனிப்போம்.

**பாரா 4:** ***இவ்வாறாக முன்குறிக்கப்பட்ட தேவ தூதர்களும், மனிதர்களும் தனித்துவத்தோடும் மாறாநிலையிலும் நியமிக்கப்பட்டிருப்பதோடு அவர்களின் தொகை நிச்சயிக்கப்பட்டதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் இருப்பதால் அவை எவ்விதத்திலும் அதிகரிக்கப்படவோ, குறைக்கப்படவோ மாட்டாது.***

***2 தீமோத்தேயு 2:19; யோவான் 13:18.***

இது ஒருவிதத்தில் நாம் பாரா 1 ல் ஏற்கனவே பார்த்த உண்மையை மறுபடியும் வலியுறுத்துகிறது. (வாசகர்கள் இவ்வருடத்தின் முதலாவது இதழில் இதுபற்றி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.) விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் கடவுளின் ஆணை பற்றிய பொதுவான விளக்கத்தை முதலாவது பாராவில் தந்தபோது கடவுளின் ஆணை மாறாத்தன்மையுடையது என்று விளக்கினர்.

எபிரேயர் 6:17 கடவுளின் திட்டங்கள் ஒருபோதும் மாறாதவை என்று போதிக்கின்றன. ஏனெனில், யாக்கோபு 1:17 ன்படி கடவுள் மாறாத்தன்மையுடையவராய் இருக்கிறார். மாறாத்தன்மையுடைய கடவுளின் ஆணையும் மாறாத்தன்மையுடையது என்பதை இந்நான்காம் பாரா விளக்குகிறது. கடவுளுடைய ஆணையின் மூலம் முன்குறிக்கப்பட்டுள்ள தூதர்களுடைய எண்ணிக்கையும், மனிதர்களின் எண்ணிக்கையும் ஒருபோதும் கூடவோ, குறையவோ மாட்டாது என்று இப்பாரா விளக்குகிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு தூதரும், மனிதரும் தனித்துவமுடையவர்களாயும் கடவுளால் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இப்பகுதி கூறுகிறது. யோவான் 13:18 ல் இயேசு சொன்னதை மீண்டும் பாருங்கள் - நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன் என்றார் இயேசு. இயேசு அவர்களுடைய எண்ணிக்கையை மட்டுமல்லாது அவர்கள் ஒவ்வொருவரையும்கூட தனித்தனியாக அறிந்திருக்கிறார். யூதாஸ் தெரிந்து கொள்ளப்படவில்லை என்பதையும் அறிந்திருக்கிறார். ஆகவேதான் அவர் நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன் என்று சொன்னார். இவ்வசனம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட அவர்களது தனித்தன்மையிலேயே கவனம் செலுத்துகிறது. யார், யார் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பது இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். இதையே இப்பகுதி விளக்குகிறது.

ரோமர் 8:29 வசனங்கள் தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை . . முன்குறித்திருக்கிறார் என்கிறது. இதிலிருந்து ஆரம்பத்தில் கடவுள் எத்தூதரையும், மனிதரையும் முன்குறித்தாரோ அவர்கள் மட்டுமே இறுதியில் அதன் பலனை அடைவார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆரம்பத்தில் முன்குறிக்கப்பட்ட தொகையில் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அது அதிகரிக்கவோ, குறையவோ மாட்டாது. இதைத்தான் விசுவாச அறிக்கை, ***இவ்வாறாக முன்குறிக்கப்பட்ட . . . தொகை நிச்சயிக்கப்பட்டதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் இருப்பதால் அவை எவ்விதத்திலும் அதிகரிக்கப்படவோ, குறைக்கப்படவோ மாட்டாது*** என்கிறது.

இனி, ஏன் கடவுள் சிலரை நித்திய ஜீவனுக்காக முன்குறித்துள்ளார்? என்பதற்கு விசுவாச அறிக்கை அளிக்கும் விளக்கத்தைப் பார்ப்போம். இதை கடவுளின் ஆணை பற்றிய இவ்வதிகாரத்தின் 5 ம் பாரா விளக்குகிறது.

**பாரா 5:** ***மனித குலத்திலிருந்து முன்குறிக்கப்பட்டவர்கள், கடவுளின் நிலைபேறுடைய மாறாத செயல், நோக்கம், இரகசியத்திட்டம், திருவுளப்பிரியம் ஆகியவற்றோடு பொருந்தி உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். படைப்புயிர்களில் காணப்படும் எதுவுமே ஒரு காரணமாகவோ, கட்டுப்பாடாகவோ அமைந்து, அவற்றால் உந்தப்படாது, எக்காலத்திலுமுள்ள மகிமைக்காக, கடவுள் தனது சுதந்திரமான கிருபையினாலும் அன்பினாலும் அவர்களை இயேசு கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார்.***

***எபேசியர் 1:4, 9, 11; ரோமர் 8:30; 2 தீமோத்தேயு 1:9; 2 தெசலோனிக்கேயர் 5:9; ரோமர் 9:13-16; எபேசியர் 2:5, 12.***

இப்பாராவில் ஏன் கடவுள் சிலரை நித்திய ஜீவனுக்காக முன்குறித்தார் என்பதற்கான காரணத்தையும், அதற்கு எதிர்மறையான காரணத்தையும் விசுவாச அறிக்கை அளிப்பதைப் பார்க்கிறோம். முதலாவதாக கடவுள் சிலரை நித்திய ஜீவனுக்காக தெரிவு செய்ததற்கான காரணத்தைப் பார்ப்போம். இப்பாராவின் முதல் பகுதி இதற்கான பதிலை அளிக்கிறது. அதாவது, - ***மனித குலத்திலிருந்து முன்குறிக்கப்பட்டவர்கள், கடவுளின் நிலைபேறுடைய மாறாத செயல் நோக்கம், இரகசியத்திட்டம், திருவுளப்பிரியம் ஆகியவற்றோடு பொருந்தி உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.*** இப்பகுதி, தனது செயலுக்கான காரணத்தை கடவுள் மட்டுமே அறிந்திருப்பதோடு அது தனக்குப் மிகவும் பிரியமாயிருந்ததால் அதைக் கடவுள் செய்தார் என்று கூறுகிறது. அத்தோடு, தனது சுதந்திரமான கிருபையாலும், அன்பினாலும் அதைக் கடவுள் செய்தார் என்றும் இப்பகுதி விளக்குகிறது. ஆகவே, கடவுளுக்கு மட்டுமே தெரிந்த அக்காரணம் என்னவாக இருந்தபோதும், அவர் தனது பாரபட்சமில்லாத கிருபையினால் சிலரை நித்திய ஜீவனுக்காக முன்குறித்தார். இவ்விளக்கத்தை வேதத்தில் தெளிவாகக் காணலாம். எபேசியர் 1:4, தம்முடைய அன்பின் காரணமாகவே கடவுள் நம்மை உலகத்தோற்றத்திற்கு முன்பாகத் தெரிந்து கொண்டார் என்று வாசிக்கிறோம். ஆகவே, தெரிந்து கொண்டவர்களுக்கான நித்திய ஜீவனை கடவுள் அவர்களை நேசித்ததால் அளிக்கிறார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம். எபேசியர் 1:10, தமது தயவுள்ள சித்தத்தின் காரணமாக கடவுள் தனது மக்களை முன்குறித்தார் என்று சொல்கிறது. 11, 12 ஆம் வசனங்களும் இதை மோலும் வலியுறுத்துகின்றன.

5 ம் பாரா கடவுள் சிலரை முன்குறித்து நித்திய ஜீவனை ஏன் அவர்களுக்கு அளித்தார் என்பதற்கான காரணத்தை மட்டும் கூறாமல், அதற்கு எதிர்மறையான உண்மையையும் விளக்குகிறது. அதாவது, ***படைப்புயிர்களில் காணப்படும் எதுவுமே ஒரு காரணமாகவோ, கட்டுப்பாடாகவோ அமைந்து, அவற்றால் உந்தப்படாது, . . . . கடவுள் . . . அவர்களை இயேசு கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார்*** என்று இப்பாராவின் இறுதிப் பகுதியில் வாசிக்கிறோம். இரண்டாம் பாராவும் இதே

உண்மையை வெளிப்படுத்தியது. அதாவது நம்மில் காணப்பட்ட எதன் அடிப்படையிலும் கடவுள் நம்மைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அவ்வுண்மை. கடவுள் நம்மீது தனது கிருபையைக் காட்டுவதற்கு நம்மில் காணப்பட்ட எதுவுமே காரண மாக அமையவில்லை (ரோமர் 9:16). எபேசியர் 2:8, 9, கிருபையினால் நாம் விசுவாசத்தை அடைந்திருப்பதாக வும், விசுவாசம் நமது கிரியை அல்ல என்றும் சொல் கிறது. இதையே 2 தீமோத்தேயு 1:9 லும் வாசிக்கிறோம். இவ்வசனம் கடவுளின் செயலுக்கான காரணத்தையும், எதிர்மறையான காரணத்தையும் ஒரே வசனத்தில் விளக்குகிறது. ஆகவே, கடவுள் நம்மில் காணப்பட்ட எதன் அடிப்படையிலும் நம்மைத்தெரிந்து கொள்ளா மல் தனது அன்பின் அடிப்படையிலும், கிருபையினா லும் நம்மைத் தெரிந்கு கொண்டார்.

அடுத்ததாக பாரா 6 ல், தனது ஆணையின் நிறை-வேற்றுதலுக்கான காரணிகளையும் கடவுளே நியமித்-திருக்கிறார் என்ற உண்மையைப் பார்ப்போம்.

**பாரா 6:** *கடவுள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை தனது மகிமைக்காக நியமித்ததோடு மட்டுமல்லாது, நித்தியமும், பூரணசுதந்திரமுடைய தனது சித்தத்தினால் அதற்கான எல்லா வழிவகைகளையும் முன்குறித்துள்ளார். அதே-வேளை தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஆதாமில் வீழ்ச்சி-யுற்றதனால், கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியினுடைய நேர்பயனுடைய அழைப்பினால் விசுவாசத்திற்காக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்டும், நீதிமான்களாக்கப்பட்டும், தத்தெடுக்கப்பட்டும், பரிசுத்த-மாக்கப்பட்டும், விசுவாசத்தினால் இரட்சிப்பிற்காக அவரது வல்லமையினால் காக்கப்படுகிறார்கள். தெரிந்தெடுக்கப்-பட்டவர்கள் மட்டுமே கிறிஸ்துவினால் மீட்கப்பட்டும், நேர்பயனுடைய அழைப்பினால் அழைக்கப்பட்டும், நீதி-மான்களாக்கப்பட்டும், தத்தெடுக்கப்பட்டும், பரிசுத்த-மாக்கப்பட்டும், இரட்சிக்கப்படுகிறார்கள்.*

*1 பேதுரு 1:2; 2 தெசலோனிக்கேயர் 2:13; 1 தெசலோனிக்கேயர் 5:9-10; ரோமர் 8:30; 2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:5; யோவான் 10:26; 17:9; 6:64.*

இப்பாராவில் அநேக சத்தியங்களை நாம் காணலாம். ஆனால், அதன் முக்கியமான போதனையை இப்போது பார்ப்போம். இப்பகுதி கடவுள் நித்திய ஜீவனுக்கு உரித்தானவர்களை மட்டும் தெரிந்து கொண்டிராமல் அவர்கள் நித்தியஜீவனை அடையும் வழிகளையும் நியமித்துள்ளார் என்ற உண்மையைப் போதிக்கின்றது. அதாவது, யார் நித்தியஜீவனை அடையப்போகிறார்கள் என்பதை மட்டும் இப்பகுதி விளக்கமால் அவர்கள் எவ்வாறு அதை அடையப்போகிறார்கள் என்பதையும் தெரிவிக்கிறது. இதையே - *தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் . . . . கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியி-னுடைய நேர்பயனுடைய அழைப்பினால் விசுவாசத்திற்-காக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்டும், நீதிமான்களாக்கப்-பட்டும், தத்தெடுக்கப்பட்டும், பரிசுத்தமாக்கப்பட்டும், விசுவாசத்தினால் இரட்சிப்பிற்காக அவரது வல்லமையி-னால் காக்கப்படுகிறார்கள்* என்ற வாக்கியங்கள் விளக்கு-கின்றன. உலகத்தோற்றத்திற்கு முன்பாக கடவுள் நம்மைத் தெரிந்து கொண்டுள்ளார் என்பதை நாம் எப்படி நம்புவது? மேலே கூறப்பட்டுள்ள நித்திய ஜீவனை அடையும் வழிமுறைகளை நாம் கிறிஸ்துவுக்-குள் அனுபவித்திருப்போமானால நிச்சயமாக நம்மைக் கடவுள் தெரிந்து கொண்டுள்ளார் என்பதை நாம் நம்பலாம். இயேசு, யோவானில் (10:27) என்னுடைய ஆடுகள் என் சத்தத்தைக் கேட்கும், அவைகளை நான் அறிந்திருக்கிறேன், அவைகள் என்னைப் பின்பற்றும் என்றார். நாம் அவருடைய ஆடுகளா என்று எப்படி அறிந்து கொள்வது? அவரை நாம் விசுவாசித்துப் பின்-பற்றுபவர்களாயிருந்தால் நிச்சயம் நாம் அவருடைய ஆடுகளே.

கடவுள் தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நித்திய ஜீவனை அடைவதற்கான காரணிகளையும் நியமித்துள்ளார் என்பதற்கு ஆதாரமான வசனமாக ரோமர் 8:30 உள்ளது - எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்-தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். ஆகவே, நித்திய ஜீவனுக்-காக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அதனை அடை-யும் வழிகளையும் கடவுளே நியமித்திருக்கிறார் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம்.

பாரா 7, இதுவரை நாம் பார்த்த சத்தியங்கள் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று விளக்குகின்றது.

**பாரா 7:** *இந்த மறை பொருளுடைய முன்குறித்தல் கோட்பாடானது, கடவுளுடைய வார்த்தையிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது சித்தத்தில் அக்கறை கொண்டு அவற்றிற்கு கீழ்ப்படியும் மனிதர்கள், நிச்சயமான நேர்பயனுள்ள அழைப்பின் மூலம் தமது நித்திய தெரிந்து கொள்ளுதலில் உறுதிபெறும்படியாக, விசேடமான விவேகத்தோடும் கவனத்தோடும் கையாளப்பட வேண்டும். ஆகவே, இந்தக்கோட்பாடு, உண்மையோடு நற்செய்திக்கு அடிபணியும் அனைவரும் கடவுளைப்போற்றவும் மதிக்கவும் வியந்து பாராட்டவும் காரணமாகவும், தாழ்மையுணர்வு, ஊக்கம், அளவற்ற ஆற்றல் என்பவற்றை அளிப்பதற்குக் காரணமாகவும் இருக்க வேண்டும்.*

*1 தெசலேனிக்கேயர் 1:4-5; 2 பேதுரு 1:10; எபேசியர் 1:6; ரோமர் 11:33; 11:5-6, ம் 20 ம்; லூக்கா 10:20.*

முதலாவதாக, நமது விசுவாசத்தில் நாம் நிச்சயத்தையும், உறுதியையும் அடைய இச்சத்தியங்களைப்படித்து அவற்றை நாம் ஆழமாகத் தியானிக்க வேண்டும். நம்மை நாம் சுயபரிசோதனை செய்து கொண்டு, தேவ கட்-டளைப்படி வாழ்ந்து வருவோமானால் நிச்சயமாக நாம் நித்தியத்திலிருந்து முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் என்-பதை உறுதியாக நம்பலாம். இரண்டாவதாக, நாம் இச்சத்தியங்களுக்காக கர்த்தரை ஆராதித்து அவருக்கு நன்றி கூறவேண்டும். இதையே பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதலாவது அதிகாரத்தில் (1-11 வசனங்கள்) தனது ஜெபத்தின் மூலம் நமக்குப் போதிக்-கிறார். மூன்றாவதாக, இச்சத்தியத்தைத் தியானித்து நாம் அதிக தாழ்மையுணர்வையும், ஆறுதலையும், ஊக்கத்தை-யும் அடைய வேண்டும்.

இவ்வுலகில் என்ன நடந்தபோதும் கடவுள் எல்லாவற்-றையும் முன்குறித்து ஆணையிட்டு, தனது சித்தத்தின்படி கொண்டு நடத்தி வருகிறார் என்ற உண்ணை எத்தனை பெரிய ஆறுதலை நமக்கு அளிக்கின்றது. கர்த்தருக்கே எல்லா மகிமையும்!

*(இவ்விசுவாச அறிக்கையை வேதபாடமாக சபைகளில் போதிப்ப வர்கள் இவற்றில் தரப்பட்டுள்ள வேதவசனங்களோடு பொருந்தி வரக்கூடிய மேலதிக வசனங்களையும் இணைத்து மேலும் விரிவாக இவ்வேதசத்தியங்களைப் போதிக்க வேண்டும். கடவுளின் ஆணைபற்றி விளக்கும் நூல்களான ஆர்தர் பிங்க் எழுதி தமிழிலுள்ள சர்வவல்லவரின் ஏகாதிபத்தியம், ஆளுகிறவர் யார்? ஆபிரகாம் பூத்தின் கிருபையின் மாட்சி போன்ற நூல்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்நூல்கள் சென்னையிலுள்ள தமிழ் பாப்திஸ்து வெளியீடுகளால் வெளியிடப்பட்டவை.)*

# 1 கொரி. 12-14 (ஆவிக்குரிய வரங்கள் பற்றிய விளக்கம்)

அந்நியபாஷையைப் பற்றி பவுல் 1 கொரி. 14 ஆம் அதிகாரத்தில் தரும் போதனைகளின் ஒரு பகுதியை நாம் கடந்த இதழில் பார்த்தோம். பவுலின் போதனையைத் தொடர்ந்து பார்ப்போம். அந்நியபாஷை பேசினால் அதைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ளும்படி இருக்க வேண்டும் என்று பவுல் இப்பகுதியில் போதித்ததைக் கடந்த இதழில் கண்டோம். இப்பகுதியின் (1 கொரி. 14:6-19) 13 ஆம் வசனத்தில் பவுல், அந்நியபாஷை பேசுகிறவர் அதன் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக கர்த்தரிடம் விண்ணப்பிக்கும்படிச் சொல்கிறார். அந்நியபாஷை பேசுகிறவனுக்கு அதன் அர்த்தம் நிச்சயம் புரிந்திருக்கும் என்று ஏற்கனவே 4 ஆம் வசனத்தில் பார்த்திருக்கிறோம். அவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் என்று அவ்வசனம் சொல்கிறது. பேசுகிறவனுக்கே புரியாத அந்நியபாஷை என்று ஒன்றில்லை. அப்படி அவனுக்கு அர்த்தம் புரியுமானால் அதை அவனால் மற்றவர்களுக்கு புரியும்படி சொல்ல முடியாமல் போவதற்குக் காரணமென்ன என்ற கேள்வி நிச்சயம் எழும்? இதற்கு இரண்டுவிதமான பதில்களை அளிக்க முடியும். முதலாவதாக, வேற்றுமொழியில் (அந்நியபாஷையில்) வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு அதை மற்றவர்களுக்கு புரியும்படிச் சொல்லக்கூடிய அளவுக்கு ஞானமில்லாமல் இருக்கலாம். ஆகவே, அவர் கர்த்தரிடம் ஜெபித்து தான் அந்நியமொழியில் பெற்றுக்கொண்டுள்ள சத்தியத்தை கேட்பவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் சொல்லக்கூடிய ஞானத்தைத் தருமாறு கேட்க வேண்டுமென்று பவுல் சொல்வதாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அதைத்தான் பவுல் இங்கு சொல்கிறாரா என்பது கேள்விக்குறி.

இரண்டாவதாக, இவ்வசனங்களுக்கான சரியான விளக்கமாக அமையும் இன்னுமொரு விளக்கத்தைப் பார்ப்போம். அதாவது, இங்கே பவுல் கொரிந்தியர்களின் செய்கையைக் கேலி செய்து மிகைப்படுத்திப் பேசுகிறார். இத்தகைய மொழிநடையைப் பவுல் ஏற்கனவே கையாண்டிருப்பதைக் கவனித்தோம். இப்பகுதியின் முடிவிலும் இம்முறையில் பவுலின் பேச்சு அமைந்திருப்பதைப் பின்பு கவனிக்கலாம். பவுலின் வாதம் பின்வருமாறு அமைந்துள்ளது. அந்நியபாஷையில் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டுள்ள உங்களுக்கு அதை மற்றவர்களுக்கு புரியும்படி சொல்லமுடியாமல் போவதெப்படி? ஏன், அதை மற்றவர்களுக்கு புரியும்படி பேசக்கூடிய வரத்தையும் கொடுக்குமாறு கர்த்தரிடம் ஜெபித்துப் பார்க்கலாமே? என்று பவுல் கேலியாக கொரிந்தியர்களின் குழந்தைத்தனமான செய்கையைப் பார்த்து கேட்கிறார். ஆகவே, இப்பகுதியில் பவுலின் பேச்சில் காணப்படும் சிலேடையைக் கவனிக்கத் தவறக்கூடாது. இப்பகுதியை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் இதில் காணப்படும் அனைத்திற்கும் எழுத்துபூர்வமாக விளக்கங் கொடுக்க முயலக்கூடாது.

தொடர்ந்து இப்பகுதியைப் பார்க்கும்போது 14 ம் வசனத்தில், நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும் என்கிறார் பவுல். 15 வது வசனத்தையும் இதோடு தொடர்புபடுத்தி வாசித்தே நாம் புரிந்து கொள்ள முயல வேண்டும். இரண்டு வசனங்களும் ஒரே காரியத்தை விளக்குகின்றன. அதாவது, அந்நியபாஷையில் பேசும்போது ஒருவன் கர்த்தர் தந்துள்ள சத்தியத்தைத் தன் ஆவியில் உணர்ந்து பேசுகிறான். ஆனால், அதை வேறு எவரும் புரிந்து கொள்ளமுடியாதபடி வேற்று மொழியில் அது அமைந்திருக்கிறது. அதன் கருத்தை கேட்கின்ற ஒருவரும் புரிந்து கொள்ள முடியாது. இதைத்தான் பவுல் 14 ம் வசனத்தில் சொல்கிறார். இந்தப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழி என்ன என்பதை அடுத்த வசனத்தில் பவுல் உணர்த்துகிறார். அதாவது, நான் கர்த்தர் கொடுத்துள்ள எந்த சத்தியத்தைப் பேசினாலும் அதை எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில், புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேசுவேன் என்கிறார் பவுல். எனக்குள்ளாக நான் கர்த்தரிடமிருந்து பெற்றுப்புரிந்துகொண்டதை மற்றவர்களும் புரிந்து கொள்ளும்படியாக கருத்தோடு பேசுவேன் என்கிறார் பவுல். இந்த உண்மையைத்தான் மிகைப்படுத்துகிற மொழியில் 15 ம் வசனத்தில் சொல்கிறார் பவுல். ஆகவே, அவ்வசனத்தை நாம் எழுத்துபூர்வமாக புரிந்துகொள்ள முயலக்கூடாது.

அந்நியபாஷை பேசுகிறவன் அதனால் தான் மட்டும் பயன் அடைகிறான். அவனுக்கு மட்டும் கர்த்தர் வெளிப்படுத்தியுள்ள சத்தியம் புரிந்திருக்கிறது. இதைத்தான் "ஆவி விண்ணப்பம் பண்ணுகிறது" என்ற வார்த்தைகள் மூலம் 14 ம் வசனத்தில் பவுல் விளக்குகிறார். அந்நியபாஷை பேசுகிறவனுக்கு தன் ஆவிக்குள் சத்தியம் புரிந்திருந்தாலும் அவன் பேசுகிற மொழி மற்றவர்களுக்குப் புரியாததால் அவன் பேசுவது கருத்தற்றதாக இருக்கிறது என்கிறார் பவுல். அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன? பவுல் சொல்கிறார் - நீ பாடினாலும், ஜெபித்தாலும் எதைப் பேசினாலும் மற்றவர்களுக்குப் புரியும் மொழியில் கருத்தோடு பேசு என்கிறார். நமது ஜெபத்தின் கருத்து நமக்கு மட்டும் புரிந்திருந்து நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு புரியாவிட்டால் அதனால் என்ன பயன்? நாம் பாடுவது நமக்கு மட்டும் புரிந்திருந்து கேட்பவர்களுக்கு புரியாமல் இருந்தால் அதனால் என்ன பயன்? அதேபோல், அந்நிய பாஷை பேசுகிறவன் வேற்றுமொழியில் பேசுகிறபோது கேட்பவர்களுக்கு புரியாமலிருக்கும்போது அதனால் என்ன பயன்? என்பதே பவுலின் கேள்வி.

சிலர் 14-17 வசனங்களைப் பயன்படுத்தி அந்நியபாஷையில் பேசுவது மட்டுமன்றி அப்பாஷையில் பாடலாம், ஜெபிக்கலாம் என்றெல்லாம் போதித்து வருகின்றனர். அந்நியபாஷையில் பாடுவது, ஜெபிப்பது எல்லாம் வேதம் போதிக்காத கர்த்தருக்குத் தெரியாத வித்தைகள். இக்காரியங்களுக்காக அந்நியபாஷை அக்காலத்தில் கொடுக்கப்படவில்லை. தான் சொல்ல வந்த உண்மையை விளக்குவதற்காக பவுல் இவ்வுதாரணங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வசனங்களின் மொழி நடையைப் புரிந்து கொள்ளாமல் சிலர், அந்நிய-

பாஷையில் பாடலாம், ஜெபிக்கலாம் என்ற கட்டுக் கதைகளையெல்லாம் உருவாக்கியிருக்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட உண்மையை பவுல் அடுத்த இரு வசனங்களின் (16, 17) மூலமும் மேலும் தெளிவாக விளக்குகிறார். உதாரணமாக, சபையில் ஒருவர் ஜெபம் செய்கிறபோது அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள் புரிந்து கொண்டு ஆமேன் சொல்லும்படியாக இருக்க வேண்டும். கேட்டுக் கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்கு எதுவும் புரியாவிட்டால் அவர்களால் ஆமேன் சொல்ல முடியாது. நீங்கள் உங்கள்பாட்டில் நன்றாக ஜெபம் செய்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டிருப்பீர்கள். ஆனால், அதைப்புரிந்து கொள்ள முடியாமல் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் எந்தப் பயனும் அடையாமல் போய்விடுவார்கள். ஆகவே, ஜெபம் புரியும்படியாகவும், மற்றவர்களுக்குப் பயன்படும்படியாகவும் இருக்க வேண்டும். அதேபோல், கர்த்தருடைய வெளிப்படுத்தல்களும் மற்றவர்களுக்கு புரியம்படியான மொழியில் கொடுக்கப்பட வேண்டும். அந்நியபாஷையில் பேசினால் அது ஒருவருக்கும் புரியாது. அதனால் எந்தப் பலனும் இருக்காது. இதுதான் பவுல் இங்கே போதிக்கும் உண்மை.

18, 19 வசனங்களில் பவுல் “உங்களெல்லோரையும்விட அதிகமாக நான் பாஷைகளைப் பேசுகிறேன். ஆனால், சபையில் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் பேசுவதையே விரும்புகிறேன்” என்கிறார். “உங்களெல்லோரையும்விட அதிகமான பாஷைகளை நான் பேசுகிறேன்” என்ற பவுலின் வார்த்தைகளுக்கு அவர் அந்நியபாஷையில் அதிகமாகப் பேசியிருக்கிறார் என்பது பொருளல்ல. பவுலுக்கு பல தேசத்து மொழிகள் தெரிந்திருந்தது. பல நாடுகளுக்குப் போய் அங்கெல்லாம் சுவிசேஷத்தை வேற்று மொழிகளில் பவுல் சொல்லியிருக்கிறார். ஆனால், சபையில் சத்தியத்தைப் பேசும்போது அம்மொழிகளால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதைப் பவுல் உணர்ந்திருக்கிறார். சபையில் உள்ள மக்களுக்கு புரியக்கூடிய மொழியில் பேசுவதே சபையாருக்கும் பயன்தரும் என்பது பவுலின் போதனை. ஒருவருக்கும் புரியாத பாஷையில் எதைப் பேசினாலும் அதை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது என்கிறார் பவுல். பவுலைப் பொறுத்தவரையில் சபையில் அந்நியபாஷையில் பேசுவதைவிட ஆத்துமாக்களுக்குப் புரியக்கூடிய மொழியில் வேதத்தை விளக்குவதே சிறந்தது.

### தீர்க்கதரிசனம் ஏன் அந்நியபாஷையை விட மேலானது? (20-25)

பதினான்காம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் வசனங்கள் 1-5 வரை பவுல் அந்நியபாஷை அதைப் பேசுகிறவனுக்கு மட்டுமே புரிந்திருக்கிறது என்றும், தீர்க்கதரிசனம் எல்லோருககும் புரியக்கூடியதாயிருப்பதால் அது அந்நியபாஷையைவிட மேலானது என்றும் விளக்கினார். அடுத்ததாக 6-19 வரையிலான வசனங்களில் சபையும், ஆத்துமாக்களும் பக்திவிருத்தி அடைய வேண்டுமானால் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் சத்தியம் போதிக்கப்பட வேண்டும் என்று பவுல் வலியுறுத்தினார். புரிந்து கொள்ள முடியாத எதனாலும் ஆத்துமாக்கள் பக்திவிருத்தி அடைய முடியாது. இனிவரும் 20-25 வரையுள்ள வசனங்கள் தீர்க்கதரிசனத்தால் அவிசுவாசிகள் உணர்த்துவிக்கப்படுகிறார்கள் என்பதை விளக்குகிறது. இக்காரணத்தால் தீர்க்கதரிசனம் அந்நியபாஷையைவிட மேலானதாக இருக்கிறது என்பது பவுலின் போதனை.

இப்பகுதியில் பவுல் தரும் விளக்கத்தை இனிப் பார்ப்போம். ஏற்கனவே 12 ம் அதிகாரத்தில் சொன்னதை பவுல் இங்கு மீண்டும் வலியுறுத்துகிறார். சிந்திக்கத் தெரியாதவர்களாயும், புத்தியில்லாதவர்களாயும் இருக்காதீர்கள் என்கிறார் பவுல். சிறு குழந்தைகளால் அதிகம் சிந்தித்து உணர முடியாது. பெரியவர்கள் குழந்தைகளைப் போல சிந்திக்க முடியாமலும் புத்தியில் குறைந்தவர்களாகவும் இருக்கக்கூடாது. வயதில் வளர்ந்தவர்கள் முதிர்ச்சி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். கொரிந்தியர்களில் சிலர் வயதில் வளர்ந்திருந்தாலும் சிந்தனையில் முதிர்ச்சி அடையவில்லை. அதனால்தான் சிறு குழந்தைகளைப்போல அந்நியபாஷைக்காக அடம்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

21 ம் வசனத்தில் பவுல் பழைய ஏற்பாட்டில் (ஏசாயா 28:11-12) இருந்து கர்த்தர் இஸ்ரவேலரைக் குறித்துப் பேசிய வார்த்தைகளை நினைவுபடுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைகளோடு வந்து தெளிவாகப் பேசிய ஏசாயாவைப்பார்த்து இஸ்ரவேலர் கேலி செய்து மனந்திருந்த மறுத்தார்கள். இஸ்ரவேலரின் அவிசுவாசத்தைப் பார்த்த கர்த்தர் அவர்களை சபித்தார். இஸ்ரவேலருக்குப் புரியாத மொழிகளைப் பேசிய எதிரி நாடான அசிரியாவின் கொடுமைக்கு அவர்கள் ஆளாகப் போவதையும், அவர்களுடைய புரியாத மொழியைக் கேட்டு வாழ வேண்டிய நிலை ஏற்படப்போவதையும் உணர்த்தினார். ஆனால் இஸ்ரவலேர் எதற்கும் மசியவில்லை.

ஆகவே, அந்நியபாஷை அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது (22) என்கிறார் பவுல். அதாவது, கர்த்தரை விசுவாசிக்க மறுத்த பழைய ஏற்பாட்டு யூதர்களுக்கு ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அடையாளமாக இருந்ததுபோல், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கட்டுப்பட மறுக்கும், யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் புரியாத மொழியான அந்நியபாஷை கர்த்தருடைய சாபத்தை நினைவுபடுத்தும் அடையாளமாக இருக்கின்றது என்பது பவுலின் போதனை. விசுவாசிக்க மறுப்பவர்களுக்கு அது கர்த்தருடைய சாபத்தின் அடையாளமாக இருக்கிறது.

இஸ்ரவேலர்களைத்தாக்கிய அசிரியர்கள் பேசியமொழி இஸ்ரவேலருக்குத் தெரியாமலிருந்தபோதும் அது ஒரு உலக மொழி. அதேபோல் அந்நியபாஷையும் ஒரு உலக மொழி. ஆனால், பேசுபவனைத்தவிர கேட்பவர்களுக்குத் தான் அதைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. இதிலிருந்து அந்நியபாஷை என்பது ஒரு மொழி என்பதையும் அது எவரும் புரிந்து கொள்ள முடியாத வெறும் ஓசை அல்ல என்பதையும் வாசகர்கள் மறுபடியும் நினைவுகூற வேண்டும்.

தீர்க்கதரிசனமோ விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கின்றது என்கிறார் பவுல். தீர்க்கதரிசனம் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் கர்த்தருடைய செய்தியை அளிப்பதால் அது கர்த்தருடைய பிரசன்னத்தை விசுவாசிகளுக்கு உணர்த்தும் அடையாளமாக இருக்கிறது. அந்நியபாஷையை கர்த்தரை அறியாதவர்களை ஈர்ப்பதற்காக பயன்படுத்த முடியாது. அது அவர்களை விரட்டத்தான் செய்திருக்கிறது என்கிறார் பவுல்.

14: 23-25 வரையிலான வசனங்களில் பவுல் அந்நிய-

(17ம் பக்கம் பார்க்க)

# எண்ணங்கள்!

திருமறைத்தீபம் பத்திரிகையை வாசிக்கும் நான் ஒரு விசுவாசி. “மனமகிழ்ச்சிக்குரிய ஓய்வுநாள்” கட்டுரையை வாசித்தபோது அது எனக்குள் இருந்த சந்தேகங்களையெல்லாம் போக்கிவிட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த ஓய்வுநாளை எப்படிப்பயன்படுத்த வேண்டுமென்பதை அறிந்து கொண்டேன். அந்த ஓய்வுநாளில் தவறாமல் சபைக்குப் போய்வருவதே என்வாழ்க்கையில் மனமகிழ்ச்சிக்குரியதாய் இருக்கிறது. நமது ஆண்டவர் ஏற்படுத்திய அந்த நாளைப் பார்க்கும்போது எனக்கும் அந்த நாளுக்கும் அநேக தொடர்புண்டு என்பதை இக்கட்டுரை மூலம் வாசித்து அறிந்து கொண்டேன்

*திருமதி. எஸ். ஜெயரெத்தினம், ஸ்ரீலங்கா*

திருமறைத்தீபத்தின் இரண்டு இதழ்கள் ஒரு விசுவாசியின் மூலம் வாசிக்கக் கிடைத்தது. அவற்றைப் படித்ததால் தேவன் என்னுடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தையும் ஆசீர்வாதத்தையும் தந்துள்ளார். ஒரு ஊழியக்காரர் எப்படி இருக்க வேண்டும்? சபையை எப்படி நடத்த வேண்டும்? ஆத்துமாக்களுக்கு சத்தியத்தை எப்படிப்போதிக்க வேண்டும் என்றெல்லாம் தெளிவாக அறிந்து கொண்டேன். எனது ஆவிக்குரிய வாழக்கையிலும் மனமாற்றம் பெற்றுள்ளேன். எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், சபை ஊழியத்திற்கும் பத்திரிகை தேவை. திருமறைத்தீபத்தை அடியேனுக்கு தவறாமல் அனுப்பி வையுங்கள்.

*பாஸ்டர் ஜோன் எலியா, தமிழ் நாடு*

நீங்கள் அனுப்பிய நூல்களும் பத்திரிகையும் வந்து கிடைத்தன. ஜெபத்தோடு படித்துத் தியானித்து தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டேன். தேவசெய்தியை ஜெபத்தோடு ஆழமாகக் கொடுப்பதற்கு பத்திரிகை துணை செய்கிறது. “உப்பு தன் சாரத்தை இழந்தால் . . .” ஆக்கம் நல்ல பயனுள்ளதாக இருந்தது. அதை அநேகருடன் பகிர்ந்து கொண்டேன். அது அவர்களுக்கும் பிரயோஜனமாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தது. அந்நூலை முடிந்தால் அனுப்பி வையுங்கள். தேவனுக்கு சித்தமானால் பத்திரிகை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளிவர அடிமை வாஞ்சிக்கிறேன். கர்த்தர் அதற்கான எல்லா வழிகளையும் கண்டிப்பாக திறந்து கொடுப்பார்.

*பாஸ்டர் எஸ். போல், தமிழ் நாடு*

திருமறைத்தீபம் இதழைத்தியானிப்பதற்கு தேவன் கிருபை செய்தார். தேவனுக்கு மகிமை. ரோமன் கத்தோலிக்க சபையின் நிலைபற்றியும், அதோடு கூட்டுச்சேர்ந்தவர்களின் நிலை என்ன? என்பதையும், இக்கடைசி நாட்களில் ஆவிக்குரிய சபைகள் இவைகளுக்கு செவி சாய்த்துப் போவதை அறியவும், வேறு அநேக பாடங்களைப் படிக்கவும் இதழ் உதவியாக இருந்தது. இவை தற்போது இலங்கை யாழ்ப்பாணத்திலிருக்கும் எமக்கும் எமது சபைகளைப் பாதுகாப்பதற்கும் மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. ஆகையால் தொடர்ந்தும் திருமறைத்தீபத்தை எமக்கு நேரடியாக அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

*டேனியல் மதி, ஸ்ரீலங்கா*

*(எண்ணங்கள் பகுதியில் வரும் கடிதங்களை வரவேற்கிறோம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் உங்களை, உங்கள் கடிதங்கள் மூலமாகவே நாம் அறிந்து கொள்கிறோம். உங்கள் மடல்களும், ஜெபங்களும் எம்மை இப்பணியில் ஊக்குவிக்கின்றன. நன்றி. – ஆசிரியர்)*

## I

## உள்ளே . .

1. கல்வினிச ஐங்கோட்பாடுகள் இன்று அவசியமா?

2. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

3. இரண்டாம் நூற்றாண்டு

4. கடவுளின் ஆணை

6. 1 கொரி. 12-14

7. எண்ணங்கள் !